விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 22 வியாழக்கிழமை (04.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 47

ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## விடுதலைப்புலி சந்தேக நபர்களை அரசு விடுதலை செய்ய வேண்டும்!

### மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள்

(கொழும்பு)

தடுப்புக் காவலில் உள்ள விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படுவோரை இலங்கை அரசு காலவரையறை இன்றி தடுத்து வைப்பதை நிறுத்தவேண்டும்.

அவர்களில் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்களை கண்டறிந்த பின்னர் ஏனையவர்களை விடுதலைசெய்ய வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் 11 ஆயிரம் பேரை இலங்கை அரசு காலவரையறை இன்றி தடுத்து வைப்பதை நிறுத்த வேண்டும். தடுப்புக்காவலில் (16ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் தொடர்பான செய்திகளை பெறத்தடை

(கொழும்பு)

ஊடகங்களுக்கு செய்திகளையோ அல்லது நேர்காணல்களையோ வழங்குவதற்கு படையினருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் குலுகல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, படையினர் ஊடகங்களுக்கு செய்திகளையோ அல்லது நேர்காணல்களையோ வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. ஊடகங்கள் அதற்கான முன் அனுமதிகளை பெறவேண்டும்.

படையினரின் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவை (16ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் ஆணையாளர்-பொன்சேகா நேற்றுச் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு



### தேர்தல் முறைகேடு குறித்து முறையீடு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவுக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்குமிடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்தே இச்சந்திப்பில் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)



## மட்டு. முதல்வருக்கு அச்சுறுத்தல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரன் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் இருந்த அவர் பின்னர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்த போதும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிவகீதா, எதிர்க்கட்சிகளின் (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அரசியல் உறுதித்தன்மை ஏற்பட இந்திய அரசாங்கம் விருப்பம்

### து பொட்டம்லைன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் இந்தியாவுக்கு நிம்மதியை கொடுத்துள்ளது.தற்போது தான் இந்தியா நிம்மதிப் பெருமூச்சை விட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் த பொட்டம்லைன் வார ஏடு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமது கவலைகளை மகிந்த புரிந்து கொள்வார் என இந்தியா நம்புகின்றது. இலங்கையில் ஒரு அரசியல் உறுதித்தன்மை ஏற்பட வேண்டும் என அது விரும்புகின்றது. இதற்கு அப்பால் இலங்கையில் அமையும் புதிய அரசுடன் புதிய உறவுகளை (16ஆம் பக்கம் பார்க்க)

## 'இராஜினாமா செய்யப் போவதில்லை' தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தனது பதவியை ராஜினாமா செய்ய போவதில்லை என்றும் அதனை நீடிக்கவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடத்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது அரச நிறுவனங்கள், ஊடகங்கள் ஆகியன தனது அதிகாரங்களை புறக்கணித்தமை காரணமாக தான் தொடர்ந்து ஆணையாளர் பதவி வகிக்க விரும்பவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

எனினும் நேற்று ஊடகவியலாளர்க டம், தான் முன்னர் தீர்மானித்தது போல பதவியை ராஜினாமா செய்யாது தொடர்ந்தும் பதவி வகிக்கவுள்ளதாக (16ஆம் பக்கம் பார்க்க)

## அரச திணைக்கள தலைவர்களை உடனடியாக பதவி விலகுமாறு உத்தரவு!

(கொழும்பு)

அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் அரச திணைக்களங்களின் தலைவர்களை உடனடியாக பதவி விலகுமாறு அரசு உத்தர விட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கா நேற்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் அரச திணைக்களங்களின் தலைவர்களை உடனடியாக பதவி விலகுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. அரசதிணைக்களங்களின் கட்டமைப்புக்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

இது ஒரு வழமையான நடவடிக்கையாகும், அரச திணைக்களங்களின் மறுசீரமைப்பு பணிகளுக்காகவே இது மேற்கொள்ளப்படு கின்றது என அவர் மேலும் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலில் ஊழல்மோசடி? எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றமை தொடர்பில் ஊழல்கள் மோசடிகள் இடம் பெற்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் அதன் ஆதரவாளர்கள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றையும் கண்டனக் கூட்டமும் நடத்தினர். இதில் ஆர்ப்பாட்டத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் வரையிலும் கலந்துகொண்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் எதிரணிக்கட்சிகளின் ஆதரவாளர்கள், எதிரணி வேட்பாளர்களின் ஆதரவாளர்கள்; ஊடகங்கள் மீதான அடக்கு முறைகள், ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றமை குறித்தும் இதில் கோஷங்கள் எழுப்பப்பட்டன. இவற்றுக்கு எல்லாம் ஒரு முடிவு காணப்பட்டு நிறுத்தப்படவேண்டு மென கோரிக்கை விடப்பட்டது.

அத்துடன் இவ் ஜனாதிபதி தேர்தலை உடன் இரத்து செய்து மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். அத்துடன் தேர்தலில் நடத்த மோசடிகள், ஊழல்களை மறைப்பதற்காக அரசாங்கம் நாடாளுமன்ற தேர்தலை உடனடியாக நடத்த முயல்கின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலை போல் நாடாளுமன்ற தேர்தல் நடை பெறக் கூடாது என நாம் வேண்டுகின்றோம் என ஆர்ப்பாட்டத்தில் (16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நால்வர் படுகொலை

(வவுனியா)

வவுனியா நெள்ளுக்குளம் பிரதேசத்தில் இரும்புக் கம்பியால் தாக்கி மூவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

இதில் காயமடைந்த ஒருவர் அநுராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சிங்கள குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள நெள்ளுக்குளம் பகுதியில் (16ஆம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர் தமிழர்களின் விருப்பங்களை கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும்

## பாரிஸ் ஈழநாட்டின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அச்சுறுத்தல்களுக்கும் இந்தியாவின் அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்து திணறிக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலம்பெயர் தமிழர்களின் பலத்தின் ஊடாக அதனைத் தகர்க்க முன்வர வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களின் அரசியல் விருப்புக்களைக் கணக்கில் எடுக்காமல் தனிப்பாதையில் பயணிப்பதை மூத்த தலைவரான சம்பந்தன் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

சிங்கள தேசத்தின் அதிபர் தேர்தல் முடிந்து மகிந்த சகோதரர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்து விட்டார்கள். சிங்கள தேசத்திற்கான இந்தத் தேர்தலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பாத தமிழ் மக்களை பெரும்பாலானோர் இந்தத் தேர்தலைப் புறக்கணித்துத் தமிழ்த் தேசியத்தின் மீதான தமது அவாவை வெளிப்படுத்தியுள்ளனர் என பாரிஸ் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் சி.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அப் பத்திரிகைக்கு அவர் எழுதிய ஆசிரியர் தலையங்கத்திலேயே இதனை எழுதியுள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்தத் தொடர் துயரங்களினூடாகப் பயணித்தாவது ஒரு விடிவை அடைய மாட்டோமா? என்ற ஆதங்கம் மட்டுமே மீந்துள்ளது.

அவர்களது நம்பிக்கைக்குரிய அந்தப் பாதையில் பயணிக்க வேண்டிய கடமையும் ஆற்றலும் புலம் பெயர் தமிழர்களிடமேயுள்ளது என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

தமிழீழ மக்கள் இன அழிப்பு யுத்தப் பேரவலத்தின் பின்னரும் அச்சுறுத்தல், படுகொலைகள், காணாமல் போதல் போன்றவற்றால் தமது உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதவர்களாக மௌனிக்க வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பை மையப்படுத்தி அரசியல் செய்யும் கூட்டமைப்பு உயிர் அச்சுறுத்தல்களுக்கும் இந்திய அழுத்தங்களுக்கும் இடையே நின்று திமிறுகின்றது. இந்த நிலையில் சிங்கள தேசத்தின் படை பலத்திற்கும் ஆட்சி அதிகாரத்திற்கும் ஈடுபடாத பலம் பெற்ற சமூகமாக உள்ள புலம்பெயர் தமிழர்கள் தமக்கான பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட வேண்டியது மிக மிக அவசியமாகவுள்ளது.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தைப் பிளவு படுத்துவதன் ஊடாக இந்தத் தமிழர் பலத்தைச் சிதைக்க முயன்ற சிங்கள தேசத்தின் சதிகளும் ஓரளவு முடிவுக்கு வந்து விட்டது என்றே நம்பத் தோன்றுகின்றது.

புலம்பெயர் தமிழர்களை இரு நிலைப் படுத்தி மோதல்களை உருவாக்க முயன்ற சக்திகளின் எல்லா முயற்சிகளையும் முறியடித்துப் பிரித்தானிய தமிழர்களும் தமிழீழமே தாகம் என்று வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான மீள் வாக்களிப்பை ஓரணியில் நின்று நிறைவேற்றியுள்ளார்கள்.

இதன் அதிர்வலைகள் கொழும்பில் எதிர் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள் வாக்கெடுப்பைத் தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் வரலாற்று அவமானம் என்று கூறும் தமிழின இரு துருவ நிலைவாதிகளது கூற்றுடன் ரம்புக்வெலவின் கூற்று ஒத்துப் போகின்றது.

இதேவேளை தற்போதும் ஈழத் தமிழர்களால் தவிர்க்க முடியாத அரசியல் சக்தியாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தி நெறிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்குண்டு.

இலங்கையின் அச்சுறுத்தல்களுக்கும் இந்தியாவின் அழுத்தங்களுக்கும் முகம் கொடுத்துத் திணறிக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் புலம்பெயர் தமிழர்களின் பலத்தின் ஊடாக அதனைத் தகர்க்க முன்வர வேண்டும்.

இதற்கான திறந்த களங்கள் இரு தரப்பினராலும் உருவாக்கப்பட வேண்டும். புலம்பெயர் தமிழர்களின் அரசியல் விருப்புக்களைக் கணக்கில் எடுக்காமல் தனிப்பாதையில் பயணிப்பதை மூத்த தலைவரான சம்பந்தன் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் நோக்கத்திலிருந்து வெளியேறிச் செல்ல தமிழீழ மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற யதார்த்தத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புரிந்து கொள்ள வேண்டும்.

நடந்து முடிந்த யாழ்.மாநகர சபை, வவுனியா நகர சபைகளுக்கான தேர்தல்களிலும் சரி சிங்கள அதிபர் தேர்தல்களிலும் சரி ஈழத் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோள்களையும் மீறிய சுயமான முடிபுகளைப் பெரும்பாலான தமிழீழ மக்கள் எடுத்திருந்ததை மறந்து விடக் கூடாது என்றுள்ளது. (ச-5)

## பரிசுத்தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியால பரிசுத் தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.மாணிக்கராசாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-14)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 2010/2011 கல்வியாண்டுக்கான பொறியியல் டிப்ளோமா மற்றும் பொறியியல் இளமாணி கற்கைநெறிக்கு பின்வரும் துறைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குடிசார் எந்திரவியல், கணனி எந்திரவியல், மின் எந்திரவியல், இலத்திரனியலும் தொடர்பாடலும் எந்திரவியல், பொறி இலத்திரனியல் எந்திரவியல், புடைவை எந்திரவியல்,

விண்ணப்பப் பத்திரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் மேலதிக விபரங்களை அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் எனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். விண்ணப்ப முடிபுத்திகதி 05.03.2010 ஆகும். (ச)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு தபால் முத்திரை வெளியீடு

(கொழும்பு)

சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் மற்றும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி என்பவற்றை நினைவுகூரும் வகையில் ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கு தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சி நடைபெறும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தபால் திணைக்களத்தின் காட்சியறையில் தபால் சேவை தொடர்பில் விளக்கமளிக்கும் பல்வேறு நிகழ்வுகளை நடத்த எண்ணியுள்ளதாக தபால் மா அதிபர் எம்.கே.வி.திசாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விசேட முத்திரை இன்று வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

வட. இலங்கைச் சங்கீத சபை
நடாத்தும்
சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 163 ஆவது
ஆராதனை விழா = 2010
அனுசரணை
ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய நிர்வாகம்
காலம்:
நிகழும் விரோதி ஆண்டு தை மாதம் 25 ஆம் நாள்
[2010.02.07] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30
மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை
இடம்:
ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் ஆலய
லக்சுமி நாராயண மண்டபம்
தலைவர்:
திருமதி அ.வேதநாயகம்
-யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்-
அ.தற்பரானந்தன்
செயலாளர்.
(C-4380)

பெயர் மாற்ற அறிவித்தல்
கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட வெற்றிவேலு மார்க்கண்டு ஆகிய நான் 2010ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் எனது பெயரை வெற்றிவேலு மாதுஜன் என பெயர் மாற்றம் செய்து கொள்கின்றேன் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
இப்படிக்கு
வெ.மாதுஜன்
(C-4384)

மணமகள் தேவை
(France) பிரான்ஸ் பிரஜா உரிமை உடைய யாழ். இந்து வேளாளர் 1980 நட்சத்திரம் மூலம், கிரக பாவம் செவ்வாய் குற்றமற்றவருக்கு அழகான, படித்த மணமகள் தேவை.
தொடர்பு:- வானம்பாடி திருமண சேவை
கோகுலன், சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
தொலைபேசி:- 021-3205229, 077 6127542
(564)

யாழ். மக்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
வலம்புரியின்
திருமண தரிசனம்
உங்கள் வலம்புரியில் ஞாயிறு தோறும் வெளிவரும்.
எங்கள் உறவுகளின் வெளிநாட்டு தொடர்புக்காக இணையத்தளத்திலும் திருமண தரிசனம் வெளிவரும்.
அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பொறுப்பை இலகுவாக்க வலம்புரியின் சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்பு:
நேரில்
இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

விஷேட பொதுக்கூட்டம்
தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி பரந்தன் எனும் கழகத்தில் பதிவு செய்து உறுப்புரிமை பெற்றிருந்த ஊர்தி உரிமையாளர்களுடனான விஷேட கலந்துரையாடல் எதிர்வரும் 07. 02. 2010 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு கிளிநொச்சி அரச அதிபர் பணிமனைக்கு முன்பாக உள்ள செயலகத்தில் நடைபெற உள்ளதால் மேற்படி உரிமையாளர்களும் நலன் விரும்பிகளும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டு கிறோம்.
நிகழ்ச்சி நிரல்
- இறை வணக்கம்
- புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு
- தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் பதிவு செய்வது தொடர்பான தீர்மானம்
- வழி அனுமதி தொடர்பான தீர்மானம்
- பணிமனை அமைத்தல் தொடர்பான தீர்மானம்
- மற்றும் முக்கிய பிற விடயங்கள்.
நன்றி
இப்படிக்கு
தலைவர் த. ஜெகதீஸ்வரன்
தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்,
கிளிநொச்சி.
(562)

# இன்று ஒரு தகவல்

## புல்லுக்கட்டும் காளைமாடும்

ஆச்சிரமத்தில் குரு உட்காந்திருந்தார்.

எதிரில் சீடர்கள் பலர் அமர்ந்து அவர் சொல்லிக் கொண்டிருக்கும் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதில் ஒரு சீடர்,

"நாம் இவரிடம் பெரிய தத்துவங்களை எதிர்பார்த்து வந்தோம். வாழ்க்கையின் உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது நம்முடைய நோக்கம். ஆனால் இவர் ஏதோ கதை சொல்லிக் கொண்டிருக்கிறாரே" என்று நினைத்தார்.

இவரைப் போலவே மற்றைய சீடர்களும் நினைத்தார்கள்.

ஆனால் வெளியில் எதுவும் சொல்லவில்லை.

பேசாமல் உட்காந்திருந்தனர்.

இதைக் குரு புரிந்து கொண்டார்.

வகுப்பு நடத்திக் கொண்டிருந்த அவர் திடீரென்று ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

அதன்பின் அவர்களையெல்லாம் வெளியே அழைத்துக் கொண்டு போனார்.

வீதியில் ஒருவன் ஒரு காளை மாட்டைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அவன் முன்னுக்கு இழுக்க காளைமாடு பின்னால் இழுத்துக் கொண்டிருந்தது.

அவனது உடம்பு வலுவாகத் தானிருந்தது. ஆனால் காளைமாடு அவனை விட வலுவாக இருந்தது. அதன் விளைவு... அவன் இரண்டடி முன்னால் இழுக்க காளை மாடு நான்கடி பின்னால் இழுத்தது.

தொடர்ந்து அந்த இழுபறி நடந்து கொண்டிருந்தது. வெளியே வந்த அந்தக் குரு சீடர்களிடம் சொன்னார்.

"பார்த்தீர்களா... இதுதான் நிலைமை" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்"

"உங்களுக்கும் எனக்குமிடையிலுள்ள நிலைமை இது தான் என்று சொல்கிறேன். ஆனால் அந்த மனிதனுக்கும் எனக்கும் வித்தியாசம் உண்டு. அவன் செய்வது முட்டாள் தனம்" இப்படிச் சொல்லிக் கொண்டே அந்த ஆளிடம் போனார்.

"ஏனப்பா... நீ ஊருக்குப் புதுசா?"

"ஆமாங்கையா... நான் ஊருக்குப் புதுசு. இந்த வேலைக்கும் புதுசு. அதனால் தான் ரொம்ப நேரமாக இப்படி இழுத்துக் கொண்டு நிற்கிறேன்"

"காளைக்கென்று ஒரு மொழி இருக்கிறது. அது உனக்குப் புரியவில்லை. அது தான் பிரச்சினை"

"என்ன ஐயா சொல்றீங்க"

"கொஞ்சம் இரு... என்று சொல்லிக் கெண்டே அந்தக் குரு பக்கத்திலிருந்த பசுமையான புற்கட்டு ஒன்றினை கையில் எடுத்துக் கொண்டார். மாட்டுக்கு முன்னால் சென்று அதன் முகத்துக்கு எதிரே காட்டினார். அவ்வளவு தான் அது பாட்டுக்கு அவருக்குப் பின்னால் நடந்து போக ஆரம்பித்தது.

அவனுக்கு ஆச்சரியம்!

"அடடா, இது என்ன? கயிறு கூடத் தேவையில்லை போலிருக்கே!"

"குரு தன்கையிலிருந்த புல்கட்டை அவனுடைய கையில் கொடு த்தார். "நீ போ... இது உன் பின்னால் வரும்" என்றார்.

அவன் போக மாடும் அவனுக்குப் பின்னால் சென்றது.

அதன் பின் அவர் தன் சீடர்களுடைய பக்கம் திரும்பி னார்.

"சீடர்களே! இதைத்தான் நான் உங்கள் விடயத்திலும் செய்ய வேண்டியிருக்கிறது" என்றார்.

சீடர்கள் வியப்போடு அவருடைய முகத்தைப் பார்த்தார்கள். குரு சொன்னார்.

"உங்களை ஒரு மலையுச்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. கயிறு கட்டி இழுத்துச் செல்வது கடினம். அது தான் கதை சொல்லி அழைத்துச் செல்கிறேன். நான் உங்களுக்குச் சொல்லும் கதைகள் அந்தக் காளை மாட்டுக்கு முன்னால் இருக்கும் புற்கட்டு மாதிரி"

என்னுடைய வேலை உண்மையை நோக்கி உங்களை அழைத்துச் செல்வது தான்.

அங்கே போனபின் உண்மையைக் கண்டு கொள்ள வேண்டியது உங்கள் வேலை.

உண்மை உச்சியில் இருக்கிறது.

ஆகவே நான் சொல்லும் கதைகளில் உண்மை இருக்கிறதா என்று ஆராயாதீர்கள்.

சான்றோர்கள் நமக்குப் பல நீதிக்கதைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றைப் படிக்கும்போது,

"ஒன்றும் நம்பும்படியாக இல்லையே" என்று நமக்குத் தோன்றும்.

அவையெல்லாம் புற்கட்டுக்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

அவை நம்மை எங்கே அழைத்துச் செல்கின்றன என்பதில் கவனமாக இருங்கள் .அதுதான் முக்கியம்!

நம்ம ஆள் ஒருத்தன் சொன்னான்;

"எங்க காளை மாடும் அப்படித்தான்சேர். நான் நாலடி முன்னால் இழுத்தால் அது எட்டடி பின்னால் இழுக்கும். இருந்தாலும் எங்க வீட்டுக்குச் சாமர்த்தியமாகக் கொண்டு போய் விடுவேன் சேர்" என்றான்.

"எப்படி"

"வேறொன்றுமில்லை. நான் எங்கே போக வேண்டுமோ அதற்கு எதிர்த்திசையில் அதை இழுக்க ஆரம்பிப்பேன். அவ்வளவுதான்... அது என்னை இழுத்துக் கொண்டு போய் விடும்"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இசை, நடனம், ஓவிய பட்டப்படிப்பிற்கான இந்திய புலமைப்பரிசிற்கான விண்ணப்பம் கோரல்

நுண்கலைத்துறை (இசை, நடனம், ஓவியம்) பட்டப்பின்படிப்பிற்கான, இந்திய புலமைப் பரிசுகளுக்குரிய விண்ணப்பங்கள், புதுடில்லியில் உள்ள கலாசார உறவுகளுக்கான இந்திய சபையால் கோரப் படுகின்றது.

விண்ணப்பதாரிகள் 20-25 வயதிற்கு இடைப்பட்டவர்களாகவும். விண்ணப்பிக்கும் துறையில் (உதாரணமாக இசை, நடனம், ஓவியம்) *பி* சித்தி உட்பட க.பொ.த. உயர்தரத்தில் 3 சித்திகளைக் கொண்டவர்களாகவும், க.பொ.த. சாதாரன தரத்தில் ஆங்கில பாடத்தில் குறைந்தது சாதாரன சித்தியைக் கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை இல.133, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-14 எனும் விலாசத்தில் அமைந்துள்ள இந்திய கலாசார நிலையத்தில், எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையிலான வார நாட்களில் காலை 9.30 மணி முதல் பகல் 1.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் நேரில் சமூகமளித்துப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் அவற்றுக்கு ஆதாரமான இறுவெட்டுக்கள், வீடியோ நாடாக்கள் மற்றும் புகைப்படங்களுடன் உரிய சான்றிதழ்களையும் விண்ணப்பதாரிகள், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் தகவல் பிரிவில் எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதியளவில் காலை 9.30 மணி முதல் பகல் 12.30 மணிக்கிடையில் கையளிக்க வேண்டும். சான்றிதழ்களின் அசல் பிரதிகளையும் நேரில் கொண்டுவர வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு கலாசார உறவுகளுக்கான இந்திய சபையுடன் 2500014 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். மலையகத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகள் கண்டியில் உள்ள பிரதி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். (2-6)

# தேர்தல் கடமையில் ஈடுபட்ட அலுவலர்களுக்கான கொடுப்பனவு விபரங்கள்

யாழ். மாவட்டத்தில் (ஜனாதிபதி தேர்தல் கடமையில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது தொடர்பான சுற்று நிருபங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இதனை உரிய திணைக்களங்களுக்கு அனுப்புவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவுகளைதிணைக்களங்கள் யாவும் குறுகிய காலத்தில் அலுவலர்களுக்கு வழங்கப் படவேண்டியதன் அவசியத்தை உதவித்தேர்தல் ஆணையாளர் சுட்டி காட்டியதனையடுத்து அலுவர்களுக்கான கொடுப்பனவுகள் பின்வருமாறு அமையவுள்ளன.

வாக்கெடுப்பு கடமையில் ஈடுபட்ட சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு ரூபா 2250, கனிஸ்ட தலைமை தாங்கும் அலுவலர் எழுதுவினைஞர்க்கு ரூபா 1250, கனிஸ்ட ஊழியருக்கு ரூபா 900, இத்துடன் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டவர்களில் தலைமை வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கு ரூபா 4500, உதவி தெரிவு அத்தாட்சி அலுவலர்களுக்கு ரூபா 2500, சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவர்களுக்கு ரூபா 1750, கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்/எழுதுநருக்கு ரூபா 1500, கனிஷ்ட ஊழியருக்கு ரூபா 1000 வழங்கப் படவுள்ளது.

மேலதிக விபரங்கள் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தந்த திணைக்களத்தைச் சேர்ந்த திணைக்கள அதிகாரிகள் தேர்தல் கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளமுடியுமெனவும் இதனை தேர்தல் திணைக்கள தலைமைக் காரியாலயத்திலிருந்தே மொத்த கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளலாம் எனவும் உதவி தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (30-2)

# இராசி பலன்

04.02-2010
(தை 22, வியாழக்கிழமை)
சஷ்டி பின்னிரவு 1.02 மணி வரை
அத்தம் காலை 6.36 மணிவரை
சித்திரை பின்னிரவு 5.57 மணி வரை
இராகு காலம் - 2.05-3.35 மணி வரை
சுபநேரம் -8.05-9.35 மணி வரை

| | |
|---|---|
| மேடம் | மனமகிழ்ச்சி, காரிய நன்மை, போசன சுகம், நண்பர்கள் உதவி. |
| இடபம் | ஆரோக்கியக் குறைவு, பிரயாணம், தாழ்ந்தசுபாவம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | தொழில் சிந்தை, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தனவிரயம். |
| கடகம் | மனோ தைரியம், பெருமையடைதல், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை. |
| சிங்கம் | போசன சுகக்குறைவு, அதிக பிரயாசை, தனவிரயம், திடீர் நன்மை. |
| கன்னி | வெகுமானம், குடும்ப நன்மை, முயற்சி கைகூடும், போசன நன்மை. |
| துலாம் | பிரயாணம், பிறருக்கு உதவுதல், அமைதிக்குறைவு, சுபசெலவு. |
| விருச்சிகம் | தனதானிய சேர்க்கை, சயன சுகம், உறவினர் உதவி, முயற்சி கைகூடும். |
| தனுசு | நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, இனிய செய்தி, விருந்துபசாரம். |
| மகரம் | புத்திரரால் கவலை, சரீரப் பிரயாசை, வீண்பயம், உஷ்ண வியாதி. |
| கும்பம் | மரியாதைக் குறைவு, வேலைச் சுமை, பொருள்விரயம், போசன சுகம். |
| மீனம் | களஸ்திர நன்மை, தேகநலன், தனலாபம், முயற்சி கைகூடும். |

வளவன்

# பழுதடைந்த வீதி

வேலணை செல்வநாயகம் வீதி போக்குவரத்துச்செய்ய முடியாதவாறு கற்குவியல்களாக காணப்படுகின்றது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு வேலணை பிரதேச சபையால் இவ்வீதியின் அரைவாசி தூரம் செப்பனிடப்பட்டு மிகுதி தூரம் மிகவும் பழுதடைந்து காணப்படுவதால் இவ் வீதியால் பயணிக்கும் பொது மக்கள் மிகவும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மேலும் இரவு வேளைகளில் இவ்வீதியில் மின்விளக்குகள் இல்லாமையால் இருட்டில் பயணிப்போர் விபத்துக்களுக்கு ஆளாக வேண்டிய நிலையுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 110 | 170 |
| தக்காளி | 140 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 80 | 90 | 90 |
| கரட் | 100 | 120 | 130 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 100 |
| பாகற்காய் | 140 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 110 | 90 |
| கரணைக்கிழங்கு | 25 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 140 | 150 | 130 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 100 | 120 | 160 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 80 | 100 | 120 |
| கத்தரி தம்புள்ள | 50 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

## துடுப்பாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் அமரர் பி.எஸ்.குமாரசாமி ஞாபகார்த்தமாக நடத்தப்படும் 20-10 துடுப்பாட்ட போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதவுள்ளது. (6-4-7)

## ஆராதனை விழா

வட இலங்கை சங்கீத சபை நடாத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 163 ஆவது ஆராதனை விழா யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை ஸ்ரீ வெங்கடேஸ வரபெருமாள் ஆலய லக்சுமி நாராயண மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (4-7)

## நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(வேலணை)

வேலணை கலைமகள் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக பொ. நடராசா, உப தலைவராக மா.இளம்பிறை, செயலாளராக வ.சிரிதரன், உப செயலாளராக க.தேவகுமார், பொருளாளராக இ.சிவநாதன் ஆகியோரும் 6 நிர்வாக உறுப்பினர்கள் உட்பட 11 நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (6-4)

## இலங்கை வங்கிக்கிளையை திறக்குமாறு கோரிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி பகுதியில் இலங்கை வங்கி ஒன்றினை திறக்குமாறு அப்பகுதி மக்களும் பொது நிறுவனங்களும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (35-2)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய குளம் சந்தி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய புனருத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.05 மணி முதல் 8.15 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கணபதி வழிபாடு, எண்ணெய் யாகம், எண்ணைக்காப்பு, யாகபூசை என்பன இடம் பெற்று மாலை 6 மணிக்கு புண்ணியாகம், விம்பசுத்தி நியாசம், யாகபூசை, விசேட திரவிய கோமம், ஸ்பர்ஷாகுதி குருமார்கள் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளது.

இதில் எண்ணைக்காப்பு காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (6-4)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

அல்வாய் வடக்கு றோ. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் க.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி மருத்தீன் பத்திநாதர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (6-4-19)

# இலங்கை வங்கியின் டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்படும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சமூக மருத்துவத்துறை சார்ந்த வைத்தியகலாநிதிகளான ஆர். சுரேந்திரகுமார், எஸ். சிவகணேசன், என் இராஜேஸ்கண்ணன் ஆகியோர் வளவாளர்களாக பங்கு பற்றவுள்ளதுடன் வங்கி உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இவ்விழிப்புணர்வு நிகழ்வானது வங்கியின் சமூகக் கடப்பாட்டுக்கான திட்டத்தின் கீழ் காலத்தின் தேவை கருதி மேலும் விரிவு படுத்தப்படவுள்ளதாக இலங்கை வங்கியின் வடபிராந்திய பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (4)

# தேசத்தின் மகுடம் கண்காட்சியில் உள்ளூராட்சி மன்றங்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினமான இன்று வியாழக்கிழமை கண்டியில் நடைபெறவுள்ள தேசத்தின் மணிமகுடம் என்னும் கண்காட்சியில் யாழ். மாவட்டத்தில் இருந்து உள்ளூராட்சி மன்றங்களும் பங்குபற்றவுள்ளன.

இதில் நல்லூர் பிரதேச சபை, வலி தெற்கு சுன்னாகம் பிரதேச சபை , வல்வெட்டித்துறை நகர சபை , சாவகச்சேரி நகர சபை , காரைநகர் பிரதேச சபை பருத்தித்துறை பிரதேச சபை ஆகிய மன்றங்கள் பங்கு பற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-30)

# வடமராட்சி வலயத்தில் கோட்டக்கல்வி அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள மருதங்கேணி கோட்டத்திற்கு கோட்டக்கல்வி அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் ஆகக் குறைந்தது 3 வருட காலத்திற்கு சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருக்க வேண்டும் எனவும் இலங்கை அதிபர் சேவை தரம் I அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் II -I ஐ சேர்ந்தவராக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இலங்கை அதிபர் சேவை I இல் பொருத்தமானவர் தெரிவு செய்யப்படாத விடத்தில் தரம் II -I ஐ சேர்ந்தவர்களிலும் தெரிவு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

இதில் விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்படிவங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாக பிரிவில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)

# குடத்தனை அ.த.க.பாடசாலையில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

## நிவர்த்திக்குமாறு கோரிக்கை

(மருதங்கேணி)

குடத்தனை அ.த.க பாடசாலையில் தற்போது மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் அப்பாடசாலைக்கு தளபாட உபகரணங்கள் மற்றும் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தளபாட உபகரணங்களை பெற்றுத்தருமாறும் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபருடன் வலயக்கல்விப்பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4-35)

## சுதந்திரதினத்தை முன்னிட்டு

# மக்கள் வங்கியினால் பெறுமதியான சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 62ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 7ஆம் திகதி நள்ளிரவு வரை பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைகளுக்கும் மக்கள் வங்கியானது ரூ 500 பெறுமதியான சான்றிதழ்களை வழங்குகின்றது.

இச்சான்றிதழ்களை பெற்று அருகிலுள்ள மக்கள் வங்கி கிளைகளில் இசுறு உதான சேமிப்பு கணக்கினை ஆரம்பிக்க முடியும் என மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுதந்திர தினத்தன்று யாழ். போதனா வைத்தியசாலையின் பற்சிகிச்சை பிரிவினை திருத்தி அமைப்பதற்கு ரூபா ஐந்து இலட்சம் பெறுமதியான காசோலையினை வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கையளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## சுய தொழில் முயற்சிக்கான உபகரணங்கள் வழங்கல்

(அல்வாய்)

வல்வெட்டித்துறை றோ.க. பாடசாலையில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஜேர்மனியுள்ள நேசக்கரம் அமைப்பின் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய் யப்பட்ட பயனாளிகளுக்கு சுய தொழில் முயற்சிக்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இவ் உபகரணங்களை இலங்கை நேசக்கரம் அமைப்பின் அமைப்பாளர் திருமதி ச.கமலாதேவி வழங்கவுள்ளதாக பாடசாலை அதிபரும் இணைப்பாளருமான நா. கண்ணதாசன் தெரிவித்துள்ளார். (6-4-19)

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை அருள்மிகு வேவில் சித்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபனம் நேற்று ஆரம்பமாகி நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து இவ் ஆலய புனருத்தாரண வேலைகள் ஆரம் பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4)

## விளையாட்டுப்போட்டி

(அல்வாய்)

வடமராட்சி கோட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களில் பெண்களுக்கிடையிலான பூப்பந்து போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை கோட்ட மட்டத்திலான வலைப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் 16 ,17ஆம் திகதிகளில் யாழ். வட இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன் வடமராட்சி வலயத்திற்கான வலைப்பந்தாட்ட போட்டி எதிர்வரும் 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4-19)




## ஆசிரியர்கள் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து வந்து தரம் 1 முதல் 5 வரையான கல்வி பயிலும் மாணவர்களின் எழுத, வாசிக்க இயலாதவர்களுக்கான செயற்பாடுகளை செயற்படுத்தும் பாடசாலை ஆசிரியர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2மணிக்கு யாழ் வலய முகாமைத்துவ மண்டபத்திற்கு சகல ஆவணங்களுடனும் வருகை தருமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2-4)

## நெல் வயல்களில் சேதம் விளைவிக்கும் கால்நடைகள்

(வேலணை)

வேலணைப் பகுதியிலுள்ள நெற் செய்கை பண்ணப்பட்டுள்ள வயல்களில் இரவு வேளைகளில் கட்டாக்காலி கால்நடைகள் சேதம் விளைவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதே வேளைகளில் நெல்வயல்களை மேய்ந்து நாசம் செய்வதால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுகின்றனர் . (2-6)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி பிரதேச சபை பொதுமண்டபத்தில் சனசமூக நிலைய சமூக உத்தியோகத்தர் வெ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.


இக்கூட்டத்திற்கு கரவெட்டி பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தவறாது சமூகமளிக்குமாறு சனசமூக நிலைய சமாசம் கேட்டுக்கொள்கின்றது. (6-4)



09

# இலங்கையின் பொருளாதாரத்தில் இந்தியாவின் தலையீடு

இந்தியாவுக்கு வழங்கப்பட்ட வர்த்தக வலயத்துக்கு ஏற்றவாறு கப்பல்போக்குவரத்துக்காக சம்பூரில் இறங்குதுறையொன்றை இந்தியா அமைத்து வருகிறது. (சம்பூரில் நிலக்கரி அனல் மின் நிலையமொன்று அமைக்கப்படுவது உங்களுக்குத் தெரியும்)நிலக்கரி அனல் மின் அமைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. புல்மோட்டையிலிருந்து சம்பூர்பாதையொன்று, அந்த விசேட பொருளாதார வலயத்தைச் சுற்றி அமைக்கப்படுகிறது. இவ்வளவு பெரியஅதிவேகப் பாதை அமைக்கப்படுவது ஏன்? அந்தப்பாதைக்கு என்ன பெயர். அந்தப் பாதையின் பெயர் தான் "காந்தி வீதி" ஏன் இது அமைக்கப்படுகிறது. மக்களின் போக்குவரத்துக்



காந்தி வீதி

காகவா ? இல்லை.

எமது நாடு வளங்கள் நிறைந்ததென்பதை நீங்கள் அறிவீர்கள்? இந்த வளங்களில் பெரும் பகுதி கிழக்கு மாகாண கடற்கரை பிரதேசத்திலேயே இருக்கின்றன.

கிழக்கு மாகாண கடல் பிரதேசத்தின் அளவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பது



உங்களுக்குத் தெரியும். இது விடயத்தில் நன்கறிந்த எமது விஞ்ஞானிகளும், நிபுணர்களும் கூறுகிறார்கள். இலங்கைக்குச் சமீபமாக கிழக்கு மாகாண கடற் பிரதேசத்தில் இலங்கையைப் போன்று 23 மடங்கு விசாலமான பிரதேசம் இலங்கைக்கு கிடைக்கவிருப்பதாகத் தெரியவருகிறது. அங்கு பாரிய கனிம வளங்கள் இருக்கின்றன. இல்மனைட், ரூடைல், மொனசைட், சர்கோன் போன்ற பெறுமதி வாய்ந்த எண்ணெயை விட பெறுமதி வாய்ந்த கனிமவளங்கள் இருக்கின்றன. இந்த கனிம வளங்களில் சில அலைகளோடு கரையில் ஒதுங்குகின்றன. குறிப்பாக இல்மனைட் என்ற மணல் கரையில் ஒதுங்குகிறது. இல்மனைட்டை நாம் இரண்டு துட்டுக்கே விற்கின்றோம். கடந்த காலங்களில் 50000 மெற்றிக்தொன் இல்மனைட்டை விற்றுள்ளோம். 70000 மெ.டொ.சர்கோன் விற்றுள்ளோம். இவற்றை சுத்திகரித்து இரசாயன பொருட்களாக விற்க முடியாமையால் எமக்கு நட்டம் ஏற்படுகிறது.

இந்தியா ஏன் இந்தப் பாதையை அமைக்கிறது. கிழக்குமாகாணக் கடற்

**இலங்கையில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கண்டியில் இடம்பெற்ற பகிரங்க உரையில் டில்வின் சில்வாவினால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் கருத்துக்கள் தொடராக பிரசுரமாகின்றது.**

கரைப் பிரதேசத்தைச்சேர்ந்த புல்மோட்டை, நிலாவெளி போன்ற பகுதிகளில் கரையொதுங்கும் இந்த கனிம மணலை ஏற்றுமதி செய்து எடுத்துச் செல்வதற்காகவே இந்தப் பாதை அமைக்கப்படுகிறது. இதன் மூலம் எமக்கு ஒன்று விளங்குகிறது. திருமலைத் துறை முகத்தை அண்டியபகுதிகள், தொழிற் சாலைகள் நிர்மாணிப்பதற்காக இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள் ளதோடு, இலங்கையின் கனிம வளங் களை இந்தியாவுக்கு எடுத்துச் செல்வதற்காக அதிவேகப் பாதை சம்பூர் இறங்குதுறை வரை அமைக்கப்படுகிறது.

கனிம வளங்களை எமக்கு இல்லாமலாக்கும் முயற்சி நடந்துகொண்டிருக்கின்றது. கடலை அகழ்வு செய்யாமலேயே இந்த வளங்களை எம்மால் பெற்றுக் கொள்ளமுடியும் என, இதுவிடயத்தில் நன்கறிந்த ஒரு நிபுணர் கூறினார்.

இல்மனைற் மணல் எப்போதும் எமது கடற்கரையில் குவிகின்றத்து. அதற்குக் காரணம் என்னவென்றால் உலகம் மேற்கிலிருந்து கிழக்குப் பக்கமாகச் சுழலும்போது, அதனால் ஏற்படும் சக்தியினால் எமது மேற்குக்கரை கடலரிப்புக்கு உள்ளாவதும், கிழக்குக் கரை நிறைவதும் நடைபெறுகின்றது. எனவே இந்தக் கனிமமணல் இயற்கையாகவே கிழக்குக் கடற்கரையில் குவிகிறது. இது மாற்றமடைய வேண்டுமெனில் உலகம் மறுபக்க இயற்கையாகவே கிழக்குக் கரையில் குவியும் கனிமமண்லை தனது நாட்டுக்கு எடுத்துச் செல்வதற்காகவே இந்த அதிவேகப் பாதையை இந்தியா அமைக்கிறது. இலங்கை அரசாங்கம் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

அதுமாத்திரமல்ல,இலங்கையின் எண்ணெய் வளங்களை கைப்பற்றிக் கொள்ளும் நடவடிக்கையிலும் இந்தியா ஈடுபட்டிருக்கிறது. சிலவேளை நீங்கள் கேள்விப் பட்டிருக்கவும் கூடும், இல்லாமலிருக்கவும் கூடும். தெற்குக் கடல் பிரதேசத்தில் அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் கொடவாய என்ற பிரதேசமொன்று இருக்கிறது. அங்கு மணல் இருக்கிறது. அந்த மணலில் பெருமளவு கனிம மணல் இருக்கிறது. வளவ நதி மூலமாக அடித்துவரப்பட்ட எல்லாவித வண்டல்களும் கனிம வளங்களும் சேர்ந்து கனிம மணல் குவியலொன்று உருவாக்கி இருக்கிறது. அங்கு பலவகை கனிம வளங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.


அந்த கனி வளத்தை இந்தியாவிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டு, ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்திய நிறுவனம் ஒன்று அதனை அகழ்வதற்கு முயற்சி செய்து வருகிறது. அதைத் தவிர கிரிந்தையிலும் விசாலமான கனிம மணல் இருக்கிறது. அந்த கனிம மணல் குவியலின் காரணமாகவே சுனாமியில் இருந்து கிரிந்தை பாதுகாக்கப்பட்டதாக அப் பகுதி மக்கள் கூறுகின்றனர். அவற்றை அகழ்வு செய்து எடுத்துச் செல்வதற்காக அமெரிக்காவில் பதிவு செய் யப்பட்ட இந்திய நிறுவனம் ஒன்றுக்கு அனு மதி வழங்கப்பட்டுள்ளது. எனவே புல் மூட்டையை மட்டுமல்ல இலங்கையைச் சுற்றியுள்ள கனிம வளங்களை அறுவடை செய்யும் எமது உரிமையை, இப் போது இந்தியா எடுத்துக்கொண்டுள்ளது.

இந்தியா கணனித் தொழில்நுட்ப துறையில் முன்னேறி இருப்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் கனிமென்பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். அந்த மென்பொருள் உற்பத்திக்கு தேவையான கனிமப் பொருட்கள் எமது நாட்டை சுற் றியே இருக்கின்றன. இந்தியாவில் அவைகள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே அவர்களுக்குத் தேவையான கனிமப் பொருட்களை எமது நாட்டில் இருந்து கொள்ளையிட்டுச்செல்ல இந்தியா முயற்சிக்கிறது. இதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது எமது அரசாங்கம்.

எமது நாட்டில் மேலும் பல கனிம வளங்கள் இருப்பதாகத் தெரியவருகிறது. இவற்றை நாம் இரு வகையாக பிரிக்க முடியும். உலோகக் கனிமங்கள், உலோகமல்லாத கனிமங்கள் என உப்பு,பீங்கான் செய்யும் கனிமம் போன்றவை உலோகம் அல்லாதவை. உலோகம் அல்லாத மற்றும் உலோக கனிமங்கள் எமது மண்ணுக்குள் புதையுண்டு கிடக்கின்றன. இவைகள்



ஆய்வு செய்யப்படுவதில்லை. காரியம் போன்ற சிலவற்றை மாத்திரம் தோண்டி எடுக்கின் றோம். இவற்றை ஆய்வு செய்து தோண்டி எடுக்கும் பணியில் ஈடுபட இந்தியாவின் கல்யாணி ஸ்டீல் போபரேசன் நிறுவனம் முன் வந்திருக்கிறது. எமது மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் கனிம வளங்கள், உலோக கனிம வளங்களை கண்டு பிடிக்கும் திட்டம் ஒன்று



இலங்கையின் எண்ணெய் வள நிலைகள்

செயல்படுகிறது. வான் பரப்பில் இருந்தும், விஞ்ஞான உருண்டைகளைக் கொண்டும் எமது உலோக, உலோகமல்லாத கனிமங்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியும். எந்த இடத்தில் இருக்கிறது? எவ்வளவு ஆழத்தில் இருக் கிறது? எத்தனை தொன் இருக்கிறது? என்பவற்றைக் கண்டுபிடிக்க முடியும். இவ்வாறு ஆய்வு செய்து வரைபடம் தயாரித்து, அதன் பின்னர் அவற்றைத் தோண்டி எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவற்றை அளப்பதாக இருந்தால், அகழ்ந் தெடுக்கும் உரிமையும் , அவற்றின் பெரும் பகுதியையும் இந்தியாவுக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையும் இந்தியாவால் விதிக்கப்படுகிறது.

இதேபோன்ற முட்டாள் தனம் இதற்கு முன்னரும் நடந்துள்ளது. கடந்த காலத்தில் சந்திரிக்கா அம்மையாரால் ஆரம்பிக்

**டில்வின் சில்வா**
பொதுச்செயலாளர், **மக்கள் விடுதலை முன்னணி**

கப்பட்டு ஐ.தே.காவால் நிறைவு செய் யப்பட்ட எண்ணெய் அகழ்வாராய்ச்சி நொபேக் என்ற நோர்வே நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. இது இலங் கைக்கு 8 மில்லியன் டொலர் நட்டத்தை ஏற்படுத்தியதோடு குழப்பத்தில் முடிவுற்றது. அந்த 8 மில்லியன் டொலரும் தரவுக ளைப் பெற்றுக்கொள்வதற்காகவே கொடுக்கப்பட்டது.

(தொடரும்)





யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர். வர்த்தக சங்கத்தலைவர் மற்றும் மக்கள் வங்கி முகாமையாளர், மாவட்ட உத்தியோகத்தர்,பேரவை ஆலோசகர், பேரவை நிர்வாகிகள் ஆகியோரை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினருக்கு பேரவைத் தலைவரின் பாரியார் திருமதி. விசாகதேவி சிவகுமாரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அருகில் பேரவைச் செயலாளர் லயன் வ.பரமசிவம் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## ஜனாதிபதி உள்ளிட்ட சிரேஸ்ட தலைவர்களின் பாதுகாப்பு உயர்த்தப்படவுள்ளதாக தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சிரேஸ்ட தலைவர்களின் பாதுகாப்பு உயர்த்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ சூழ்ச்சித் திட்டம் தொடர்பிலான தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில முக்கிய தலைவர்களின் பாது காப்பை அதிகரிப்பதற்கு பாதுகாப்புப் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என்ற அச்சம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2-6)

## அநுராதபுரத்தில்

## தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரியை தாக்கிய நபரை கைது செய்ய உத்தரவு

கடந்த வாரம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது கடமையில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய மத்திய அதிகாரியைத் தாக்கிய நபரை உடனடியாக கைது செய்து ஆஜர்படுத்துமாறு அனுராதபுரம் நீதவான் நீதிமன்றப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான அறிக்கையை அனுராதபுரம் தலைமையகப் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்திற்கு அறிவித்த போதே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி அறிக்கையை உடனடியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அனுராதபுரம் பிரதம நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய தர்சிகா விமஹி பொலிஸிற்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று அனுராதபுரம் மாவட்ட வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் இடம்பெற்ற அனுராபுரம் மத்தியம்கா வித்தியாலயத்திற்கு அருகில் அவர் கடமையை முடித்து விட்டு திரும்பியபோது இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (2-14)

## விருது வழங்கும் நிகழ்வு

(கொழும்பு)

கொழும்பு கலா பவனத்தில் நடைபெற்ற கலாபூஷண விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்ளாத கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன் (கந்தர் மடம்), வைரமுத்து இராசையா , பொ. சிவகுருநாதன் (சுழிபுரம்) ஆகியோருக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளதுடன் 2008 ஆம் ஆண்டுக்கான தேசிய இலக்கியப் போட்டிகளில் மாவட்டத்தில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (2-3)

## எரிக்சொல்ஹெய்மின் கோரிக்கை அரசாங்கத்தால் நிராகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் விடுத்த கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

எரிக்சொல்ஹெய்மினால் வெளியிடப்பட்டுள்ள கருத்து முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதென அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் உள் விவகாரங்களில் தலையீடு செய்ய சொல்ஹெய்மிற்கு எவ்வித உரிமையும் கிடையாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஈட்டிய வெற்றி குறித்த வாழ்த்து செய்தியில் அவர் இதனைக் சுட்டிக் காட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாழ்த்துச் செய்தியில் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு வழங்குமாறு சொல்ஹெய்ம் கோரியிருந்தார். (2-6)

## தேர்தலின் பின்னர்

## குழப்பம் ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டிய 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சதித் திட்டம் தீட்டிய 37 பேரை சந்தேகத்தின் பேரில் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.கைது செய்யப்பட்டவர்களில் பௌத்த பிக்குகள், இராணுவ உயர் அதிகாரிகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சூழ்ச்சித் திட்டத்தின் பிரதான சூத்திரதாரிகளாக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரும் உயர் இராணுவ அதிகாரி ஒருவரும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் .

ஏனையவர்களில் இரண்டு பௌத்த பிக்குகளும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் கடற்படை , விமானப்படை மற்றும் இராணுவப் படையைச் சேர்ந்த முன்னாள் அதிகாரிகளும் அடங்குவதாக குறிப்பிடப்படுகிறது.

இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் மேலும் பல சந்தேக நபர்களை கைது செய்ய முடியும் எனப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

ஜெனரல் சரத்பொன்சேகாவின் காரியாலயத்தில் இருந்து மீட்கப்பட்ட கணனிகளில் காணப்பட்ட தகவல்களின் அடிப்படையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## அரசு தெரிவிக்கும் குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை

## சரத்பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

ராஜபக்ஷ அரசை கவிழ்க்க இராணுவ புரட்சியை ஏற்படுத்த திட்டமிட்டதாக என் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மை அல்ல என முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

என்னுடன் சேர்ந்து கொண்டு இராணுவ புரட்சி நடத்தி ராஜபக்ஷ அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சித்ததாக 12 இராணுவ அதிகாரிகளை கட்டாய ஓய்வு என்று கூறி பதவி நீக்கம் செய்துள்ளனர்.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது எனக்கு நான்கு பொலிஸார் மட்டுமே பாதுகாப்பு அளித்து வருகின்றனர். இவர்களை வைத்துக்கொண்டு நான் எப்படி இராணுவ புரட்சியில் ஈடுபட முடியும்.

உண்மையில் எங்களின் பாதுகாப்பு கருதியே தேர்தல் முடிவு வெளியான அன்று ஹோட்டலில் தங்கியிருந்தோம். இதை சதி ஆலோசனை என்று கூறியுள்ளனர்.

இராணுவ புரட்சி நடத்த முயற்சித்ததாக என் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகள் உண்மை அல்ல.

எனக்கு 40 இலட்சம் மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே நாட்டை விட்டு ஒரு போதும் வெளியேறமாட்டேன். நீதிக்காக தொடர்ந்து குரல் கொடுப்பேன். இவ்வாறு சரத் பொன்சேகா கூறினார். (2-6)

## இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள மாணவர்கள் 8ஆம் திகதிவரை பாடசாலைக்கு செல்ல முடியாது

(கொழும்பு)

இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் தமிழ் மக்களும் முகாம்களுக்கு வெளியில் வாழ்ந்துவரும் தமிழ் மக்களும் இணைந்து தமது பிள்ளைகளுக்கு பாடசாலை வசதியை ஏற்படுத்தி தருமாறு போராட்டம் ஒன்றை வவுனியாவில் மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

போரினால் இடம்பெயர்ந்து வவுனியாவில் முகாம்களிலும் அதற்கு வெளியிலும் வசித்து வரும் பாடசாலை சிறுவர்களும் பெற்றோரும் நேற்று முன்தினம் மாகாண சபை மேலதிக கல்விப்பணிப்பாளரின் அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

தமது பிள்ளைகளுக்கு பாடசாலை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

முகாம்களில் நடத்தப்படும் மாலை நேர வகுப்புக்களை நிறுத்தி காமினி மகாவித்தியாலயத்தில் பெப்ரவரி 1ஆம் திகதியில் இருந்து மாணவர்களை இணைத்துக் கொள்வதாக கல்வி அதிகாரிகள் முன்னர் தெரிவித்திருந்தனர்.

ஆனால் அதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்யவில்லை என தெரிவித்தே மாணவர்கள் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.


எனினும் மாணவர்கள் 8ஆம் திகதியில் இருந்து பாடசாலையில் இணையும் வசதிகளை ஏற்படுத்தி வருவதாக அவ்விடத்திற்கு வந்த வவுனியா மாவட்ட கல்விப்பணிப்பாளர் பி.ஆர்.ஏ. ரஞ்சனி ஒஸ்வேல்ட் தெரிவித்துள்ளார்.

இருந்த போதும் எதிர்வரும் 8ஆம் திகதி வரையிலும் இடம்பெயர்ந்த மாணவர்கள் பாடசாலைக்கு செல்லமுடியாது என வவுனியா தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

## 2030ஆம் ஆண்டில்

# உலகில் புற்றுநோயால் உயிரிழப்போர் எண்ணிக்கை 1.7 கோடியைத் தாண்டும்

## உலக சுகாதார நிறுவனம்



(மணிலா)

உலகம் முழுவதும் புற்றுநோயால் உயிரிழப்போரின் எண்ணிக்கை எதிர்வரும் 2030இல் 1.7 கோடியைத் தாண்டும் என கணிக்கப்படுவதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

இந்தாண்டில் புற்றுநோயால் உயிரிழந் தோரின் எண்ணிக்கை சர்வதேச அளவில் 76 இலட்சத்தைத் தாண்டும் என்றும் உலக சுகாதார நிறுவன அறிக்கையில் கூறப்பட்டுள் ளது.

இன்று உலக புற்றுநோய் தினம் கடைப் பிடிக்கப்படுகின்றது. இதையொட்டி உலக சுகாதார நிறுவனத்தின் மண்டல இயக்குநர் ஷின் யங்சூ வெளியிட்டுள்ள அறிக்கையில்:

எய்ட்ஸ், காசநோய், மலேரியா போன்ற நோய்களைவிட புற்றுநோயால் உயிரிழப் போர் எண்ணிக்கை அதிகளவில் உள்ளது. உலகில் எட்டுப் பேர் இறந்தால் அதில் ஒருவர் புற்றுநோயால் பலியாகும் நிலை உள்ளது. ஆனால் இந்த இறப்புக்கள் தவிர்க்கக்கூடி யதுதான் என்பது கவனிக்கத்தக்கது.

ஆண்டு தோறும் உலகம் முழுவதும் சுமார் 1.2 கோடி மக்களுக்கு புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்படுகிறது.

புற்றுநோய் தடுப்பு, கண்டுபிடிப்பு, சிகிச்சை போன்றவை தொடர்பான விழிப் புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியாக வேண்டும்.

புற்றுநோய் குறித்து உலகளாவிய ஒரு பயம் இருக்கிறது. ஆனால் சரியான விழிப்புணர்வு மற்றும் தெளிவான திட்டமிடல் இருந்தால் பல புற்றுநோய்களில் இருந்து மக்கள் தப்பிக்க முடியும்.

புற்றுநோய்களில் 30 சதவீதத்துக்கும் மேற்பட்டவை சாதாரண நடவடிக்கைகளின் மூலமே தடுக்கக்கூடியவைதான். புகை பிடிப்பதைத் தவிர்த்தல், ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, மது பழக்கத்தைக் கட்டுப்படுத்துதல், போதைப் பொருட்களை தவிர்த்தல் போன்ற அடிப்படை விடயங் களின் மூலமே பல்வேறு புற்றுநோய்கள் வராமல் தடுத்துவிடலாம்.

பலவிதமான புற்றுநோய்களுக்குப் புகைப் பழக்கத்தை ஒதுக்குவதே மிகப் பெரிய தனியொரு தற்காப்பு நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

அதோடு 30 நிமிட நல்ல உடற்பயிற்சி களின் மூலம் மார்பு உள்ளிட்ட சில புற்று நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. (6)

## 55 நாடுகள் கரியமில வாயுக்களைக் கட்டுப்படுத்த உறுதி

(நியூயோர்க்)

55 நாடுகள் கரியமில வாயுக்களை வெளிவிடுவதை 2050ஆம் ஆண்டுக் குள் குறைக்க உறுதி பூண்டுள்ளன. இதை அந்த நாடுகள் ஐ.நா. சபைக்குத் தெரிவித்துள்ளன.

கோபன்ஹேகன் நகரில் நடந்த உலகத் தலைவர்கள் மாநாட்டில் நடந்த பேச்சு வார்த்தைக்குப் பின் அந்த நாடுகள் இந்த உறுதியை அளித்துள் ளன.

அமெரிக்கா, சீனா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை 2020ஆம் ஆண்டுக்குள் கரிய மில வாயுவைக் குறைத்துக் கொள்ள ஏற் கனவே உறுதி அளித்துள்ளன. இதை அந்த நாடுகள் மீண்டும் உறுதிப்படுத் தின.

உலக அளவில் வெளிப்படுத்தப்படும் கரியமில வாயு வெளியேற்றத்தில் இந்த 55 நாடுகளில் இருந்து 78 சதவீதம் கரியமில வாயு வெளியேறுகின்றன.

இந்த 55 நாடு களும் கடந்த மாதம் தங்கள் உறுதி மொழியை ஐ.நா. சபைக்குத் தெரிவித்துள்ளன. இதை ஐ.நா. சபை வரவேற்றுள்ளது. (6)

# பூகம்பத்திற்குப் பின் ஹெயிட்டியிலிருந்து ஐந்து இலட்சம் பேர் வெளியேற்றம்

## ஐ.நா. தெரிவிப்பு

(லண்டன்)

ஹெயிட்டியில் கடந்த மாதம் நடந்த மிக மோசமான நிலநடுக்கம் காரணமாக அந்த நாட்டின் தலைநகர் போர்ட் ஒவ் பிரின் ஸிலிருந்து மட்டும் ஐந்தீ இலட்சம் பேர் வரை வெளியேறியிருக்கக்கூடும் என்று ஐ.நா. சபை கணித்துள்ளது.

அதேசமயம் இவர்களில் பலர் உதவி நிறு வனங்கள் அமைத்திருக்கும் தற்காலிக முகாம்களில் தஞ்சம் கோராமல் நகர்ப்புறங் களைத் தாண்டி கிராமப்புறங்களில் இருக்கும் அவர்களின் நண்பர்கள் மற்றும் உறவினர் களின் வீடுகளிலேயே தஞ்சம் கோரியிருப்ப தாகவும் ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

ஹெயிட்டியில் செயற்படும் ஐ.நா. சபை மற்றும் உதவி நிறுவனங்கள் அனைத்தும் அங்குள்ளவர்களின் இருப்பிடம் குறித்து முக் கிய கவனம் செலுத்தி வருவதாக ஐ.நா. சபை யின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் ஜோன் ஹோம்ஸ் தெரி வித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான கூடார நக ரங்கள் என்பவை தற்காலிக தீர்வே என்பதை யும் அவர் வலியுறுத்தியுள்ளார். (6)



லண்டன் ஹீத்ரூ விமான நிலையத்தின் அனைத்து நுழைவு வாயில்களிலும் நவீன ஸ்கேனர் கருவி பொருத்தப்பட்டுள்ளது. அந்த ஸ்கேனர் கருவி செயற்படும் விதத்தை விளக்கிக்காட்ட ஒரு பாதுகாப்புப் படை அதிகாரி கைகளை தூக்கியபடி நின்றார். அடுத்த படம் அவரது முதுகுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியை கறுப்பு நிறத்தில் காட்டுகின்றது ஸ்கேனர்.

# நிதி நெருக்கடியால் அவுஸ்திரேலியாவில் 8 கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன

(மெல்பேர்ன்)

நிதி நெருக்கடி காரணமாக அவுஸ்திரே லியாவில் 8 ஆங்கில மொழிக் கல்லூரிகள் கடந்த திங்கட்கிழமை முடப்பட்டன. இதனால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் மேலும் 530 மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அங்குள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கல்லூரிகள் மூடப்பட்டதால் 390 பேர் வேலைவாய்ப்பை இழந்துள்ள தாக குறிப்பிடப்படுகின்றது.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 9 நிறுவனங் கள் மூலமே இக்கல்லூரிகள் நடத்தப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து இயர்ன்ஸ்ட் யங் அமைப் பைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில்; கல்லூரி கள் மூடப்பட்டதால் சிட்னியில் 500 மாணவர் களும், பெர்த்தில் 480 மாணவர்களும், பிரிஸ்பேனில் 260 மாணவர்களும், கெய்ரன்ஸில் 150 மாணவர்களும் அடிலெய் டில் 130 மாணவர்களும், கோல்டுகோஸ்டில் 265 மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கல்லூரிகளை நடத்தி வந்த நிறுவனங் களில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரண மாக கல்லூரிகளை மீண்டும் திறக்க முடிய வில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் விசாரணை நடத்தி வருகிறோம். விசாரணை அறிக்கை வந்த பிறகே பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி குறித்து தெரிவிக்க முடியும் என்று அவர் தெரி வித்தார்.

பாதிக்கப்பட்டுள்ள 20 வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடு கள் செய்வது குறித்து அரசு தீவிரமாக ஆலோ சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)


# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 4 வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் பலி

(பெஷாவர்)

பாகிஸ்தானில் திர் பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 4 பேர் பலியாகியுள் ளனர். 5 பாதுகாப்புப் படையினர் படுகாய மடைந்துள்ளனர். இச்சம்பவத்தில் பலியான 4 பேரும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் குண்டுவெடிப்பு நடந்த இடம் அருகே பள்ளிக்கூட்டத்தின் கட்டடம் இடிந்து விழுந்து மாணவர்களை மீட்கும் பணியும் நடந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன. (6)



பிரான்சில் சூரிய ஒளி வெப்பத்தில் இயங்கும் நவீன இயந்திரப்படகு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 25 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இந்த படகின் மேற்பகுதியில் சூரிய ஒளித் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன.

# அமெ. ஏவுகணைத் திட்டத்திற்கு ஈரான் கடும் கண்டனம்

ஏவுகணைத் தாக்குதலுக்கு எதிரான புதிய தற்காப்பு கட்டமைப்பு ஒன்றை வளைகுடா பிராந்தியத்தில் நிறுவுவதற்கான அமெரிக்கத் திட்டத்திற்கு ஈரான் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஈரான் எதிர்ப்பு நிலையை உருவாக்க அமெரிக்கா முயல்வதாக ஈரானின் வெளியுறவுத்துறைப் பேச்சாளர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை ஈரான் தனது அண்டை நாடுகளுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலை யும் உருவாக்கவில்லை என்று ஈரான் நாடா ளுமன்ற சபாநாயகர் அலி லாடிஜானி தெரி வித்துள்ளார்.

ஈரான் அல்லது வடகொரியா தயாரிக்கக் கூடும் என்று கருதப்படும் தொலைதூரம் சென்று தாக்கவல்ல ஏவுகணைகளை இடை மறித்துத் தாக்கி அழிக்கவல்ல ரொக்கெட்டுக் களை அமெரிக்கா நேற்று முன்தினம் பரி சோதித்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

(கொழும்பு)

டெங்கு நோயைக் கட்டுப்படுத்தவென அரசாங்கம் ஐந்நூறு (500) மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத்துறை அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

சுகாதாரக் கல்வி பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பிரதிப் பணிப்பாளர் நாயகம் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்;

நாட்டில் டெங்கு நோயை முழுமையான அடிப்படையில் கட்டுப்படுத்துவதற்கென விரிவான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 40 புகை விசிறல் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு டெங்கு நுளம்புகள் பெருகும் அச்சுறுத்தல் மிக்க பிரதேச மருத்துவ அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 60 புகை விசிறல் இயந்திரங்கள் தருவிக்கப்படவுள்ளன.

இதேநேரம் டெங்கு நோயை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு தேவைப் படும் இரத்தப் பரிசோதனை இயந்திரங்களும் இறக்குமதி செய்யப்பட்டு அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

நாட்டில் 61 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் டெங்கு நுளம்புகள் பெருகும் அதிக அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களாக விளங்குகின்றன. இப்பிரதேசங்களில் டெங்கு நுளம்பு ஒழிப்புப் பணிகளை முன்னெடுக்கவென ஒவ்வொரு மருத்துவ அதிகாரி பிரிவுக்கும் 15 பேர்களை உள்ளடக்கிய விசேட செயலணிகள் அமைக்கப்படவுள்ளன.

கியூபாவின் பி.ரி.ஐ. பேக்யரியா நுண்ணங்கியை பாவித்து நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவென அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கமைய அக்குரணை, கம்பளை, கண்டி ஆகிய பிரதேசங்களில் பி.ரி.ஐ.யைப் பயன் படுத்தி நுளம்புகளை ஒழிக்கும் திட்டம் முதற் கட்டமாக ஆரம்பிக்கப்படும். தற்போது பி.ரி.ஐ.யை தருவிப்பதற்கு கேள்வி கோரப் பட்டுள்ளன.

தற்போது யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, கம்பஹா, கண்டி ஆகிய மாவட்டங்களில் டெங்கு தீவிரமடைந்துள்ளன. அதனால் நுளம்புகள் பெருகும் இடங்களை ஒழித்துக் கட்டுவதில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்துவது அவசியம் என பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (2-6)

## இலங்கை அகதிகள் சிலருக்கு அவுஸ்திரேலியாவுக்கான நிரந்தர விசா

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் உட்பட 94 பேருக்கு அவுஸ்திரேலியா அரசாங்கம் நிரந்தர விசா அனுமதியை வழங்கியுள்ளது.

இதனையடுத்து இந்த 94 பேரும் நேற்று அவுஸ்திரேலியாவின் பிரதான நகரங்களில் குடியேறுவதற்காக கிறிஸ்மஸ்தீவுகளில் இருந்து வெளியேறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த எண்ணிக்கையில் இலங்கையர்களின் தொகை குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

இந்த அகதிகளின் எண்ணிக்கையுடன் கிறிஸ்மஸ் தீவுகளில் இருந்து அவுஸ்திரேலியாவால் நிரந்தர விசா வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 800 --ஆக உயர்கிறது.

(2-6)

## சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவு உயர்த்தப்பட்டுள்ளது

### லயனல் பிரேமசிறி

(கொழும்பு)

வறிய மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகளை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென சமூக சேவைகள் பிரதி அமைச்சர் லயனல் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

இதன்படி வருமான வாய்ப்பற்றவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.

குறித்த கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை திறைசேரி மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். நாடு முழுவதிலும் உள்ள 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## அரசாங்க வைத்தியசாலைகள், பாடசாலைகள் மக்கள் நன்மதிப்பில் வீழ்ச்சியடைந்துள்ளன

### சொரத தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகள் தொடர்பான மக்கள் நன்மதிப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கதிர்காம கிரி விஹாரை மாநாயக்க தேரரும் ஊவா பல்கலைக்கழக துணைவேந்தருமான சொரத தேரர் தெரிவித்துள்ளார்.

பாரியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படும் வைத்திய மற்றும் கல்வி சேவைகள் தொடர்பிலான மக்கள் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அநேகமான பெற்றோர் தனியார் பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளுக்கு கல்வி புகட்ட நாட்டம் காட்டி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளுக்காக அரசாங்கம் செய்து வரும் செலவுகள் உதாசீனம் செய்யப்படுவதாகவும் பொருளாதார இயலுமை குறைந்தவர்கள் மட்டுமே அரசாங்க வைத்தியசாலை மற்றும் பாடசாலைகளை நாடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பாடசாலைக் கல்வியை விடவும் பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்வதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை ஈட்ட முடியும் என்ற தப்பான அபிப்பிராயம் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(2-6)

## தேர்தல் மோசடி தொடர்பான தரவுகள் திரட்டப்பட்டு வருகின்றது

### ஜே.வி.பி.

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாகவும் அது தொடர்பான தரவுகள் திரட்டப்பட்டு வருவதாகவும் ஜே.பி.வி. கட்சி அறிவித்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்கி பல்வேறு கட்சிகளும் ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கைகளில் முனைப்புக் காட்டி வருவதாக ஜே.வி.பி. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவடைந்து 21 தினங்களுக்குள் முறைகேடுகள் மற்றும் மோசடிகள் தொடர்பில் வழக்குத் தொடர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பி. கட்சியின் சட்டத்தரணிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணிகளும் கூட்டாக இணைந்து சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆரம்பம் முதலே தேர்தல் மோசடி இடம்பெற்று வந்ததாகவும் சரியான ஆதாரங்களைத் திரட்ட வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முறைகேடுகள் தொடர்பில் முதலில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பின்னர் பொதுத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-4)

## பாராளுமன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்படும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இளைஞர்களுக்குக் கூடுதல் சந்தர்ப்பம் வழங்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சி அறிவித்துள்ளது.

சிறந்த கல்விப் பின்னணியை உடைய இளைஞர் யுவதிகளை இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் களமிறக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதாகவும் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சிறந்த கல்வித் திறமைகளை உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து செயற்படுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் சகல இன மக்களும் மகிழ்ச்சியாக வாழ்க்கூடிய சூழலை உருவாக்குவதே தமது கட்சியின் எதிர்பார்ப்பு என்றும் சிவாஜிலிங்கம் மற்றும் ஸ்ரீகாந்தா ஆகியோருக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பில் கட்சியின் செயற் குழுவே தீர்மானிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் கணிசமான அளவு வாக்குகளை ஜெனரல் சரத் பொன்சேகாவிற்குப் பெற்றுக்கொடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு முடிந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் கூட்டிணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானதென புளொட் கட்சி அறிவித்துள்ளது.

மேலும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் பிரதேசத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என கட்சியின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (2-6)

## இலங்கை தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு குறித்து செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தில் ஆராயப்படும்

### கலைஞர் கருணாநிதி

(சென்னை)

பெப்ரவரி 20ஆம் திகதி தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும் என முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

சென்னை அறிவாலயத்தில் தி.மு.க. தலைமை கழகத்தில் முதல்வர் கருணாநிதி நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் பெப்ரவரி 20ஆம் திகதி நடைபெறும். இந்த கூட்டத்தில் அரசியல் விவகாரங்கள், பெண்ணாகரம் இடைத்தேர்தல் ஆகியன குறித்து ஆலோசிக்கப்படும்.

அதில் இலங்கையில் தமிழர்களுக்கு அதிகாரப் பங்கீடு அளிக்க வேண்டும் என்றும் அந்த விடயத்தில் மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தி பொதுக்குழு கூட்டத்தில தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றார். மேலும் கோவையில் நடக்கவிருக்கும் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் நடைபெறும் ஆய்வரங்கத்தில் கலந்து கொள்ள 4 ஆயிரத்து 625 பேர் பதிவு செய்துள்ளனர்.

இவர்களில் 426 பேர் வெளிநாட்டவர்கள். மொத்தம் 48 நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கின்றனர் என்ற தகவலைத் தெரிவித்தார்.

அத்துடன் நளினி விடுதலை குறித்த கேள்விக்குப் பதிலளித்த முதல்வர் ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் நளினி விடுதலை குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டது.

அந்த குழு அறிக்கையை தாக்கல் செய்துள்ளது. இந்த விடயத்தில் தமிழக அரசு தன்னிச்சையாக முடிவு செய்ய முடியாது. எனவே மத்திய அரசுடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்றார்.

(2-6)

# சுகாதார அமைச்சின்
# மாணவ தாதிமார் பயிற்சி நெறிக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை -2009

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சுகாதார அமைச்சினால் 23.10. 2009 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாணவ தாதிமார் பயிற்சி நெறிக்கான ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பித்தவர்களான தகைமைகளைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப்பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00மணி வரை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பின்வரும் ஆவணங்களின் மூலச் சான்றிதழ் மற்றும் அவற்றின் பிரதிகளுடன் விண் ணப்பதாரிகள் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேலும் நேர்முகப்பரீட்சார்த்திகளிற்கான தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தேர்விற்கு சமூகமளிப்போர் பின்வரும் ஆவணங்களை தவறாது கொண்டு வரவும்

01. பிறப்புச்சான்றிதழ்

02. கல்விச் சான்றிதழ் (க.பொ.த சாதாரண தரம் , க.பொ. த.(உயர்தரம்)

3.தேசிய அடையாள அட்டை

4. விவாகமாகாதவர் என கிராம சேவையாளர் , பிரதேச செயலளரினால் உறுதிப்படுத் தப்பட்ட சான்றிதழ்.

5. வாக்காளர் பட்டியல் (3வருடங்கள்)

மேற்குறிப்பிட்ட தினத்தில் சமூகமளிக்காத வர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் எனவும் இதற்கான கொடுப்பனவு எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் வருமாறு,

அசோகா விநாசித்தம்பி (கொக்குவில்), தமயந்தி துரைராஜசிங்கம் (வியாவில் , காரைநகர்), தேனுகா கதிர்காமநாதன்( மீசாலை), சுதர்சினி யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), கஜீபன் நவரத்தினம் (கோண்டாவில்), கிரிஸ்ரீன் பானுமதி சிறில்சேவியர்( இளவாலை), இந்துஜா வைத்திலிங்கம் (ஆனைக் கோட்டை), சர்மிளா சிவலிங்கம் (சுழிபுரம்), ஜெயகாந் அரசநாயகம் (யாழ்ப்பாணம்), மணிமாறன் சிவபாதம் (இணுவில்).

றபிந்தா ஐயாதுரை( சுழிபுரம்),சுகன்யா பாலேந்திரா (மானிப்பாய்), சதீஸ் பரமானந்தன் (கோண்டாவில்),கபாலினி லோகநாதன் (சாவகச்சேரி),பிரசாந்தினி கைலாயபிள்ளை( மீசாலை), சோமகாந்தி சோமசுந்தரம் (மீசாலை), டெவிந்தினி சோதிலிங்கம் (கோப்பாய்), சிந்துஜா வசந்தகுமாரன் (சாவகச்சேரி),சுதர்சினி அருட்சோதி (நல்லூர்).

விஜித்தா வரதராஜா (சாவகச்சேரி), யசோதினி பரமானந்தம் (கோப்பாய்), கஸ்தூரி தவரத்தினம் (சாவகச்சேரி), சசிரேகா கோகிலராஜா (நுணாவில்) சுதீசினி புஸ்பகுமார் (கொடிகாமம்), சிந்துஜா செல்வராஜா (மானிப்பாய்), நிரோஜி லோரன்ஸ் (ஆனைக்கோட்டை) பனோஜா இராஜதுரை (கட்டைப்பிராய்).

சஜந்தினி சோதிநாதன் (சுழிபுரம்), நிசாந்தினி பேரின்பம் (அல்வாய்), புஸ்பவிஜித்தா பரமநாதன் (வரணி) ,யாழினி வேலாயுதபிள்ளை (அல்வாய் மேற்கு),துளசிகா விஜயநாதன் (சுன்னாகம்),யசோதா அழகானந்தம் (சுன்னாகம்), வொறினா குணநாயகம் (கோண்டாவில்),தாட்சாயினி விவேகானந்தா (கோப்பாய்), பபிந்தா ஞானேஸ்வரன் (கோண்டாவில்), சர்மிளா பாலசுப்பிரமணியம் (கோப்பாய்).

காயத்திரி ஜெயக்குமார் (யாழ்ப்பாணம்), அனோஜா இலங்கை நாயகம் (சங்கானை), புவி விஸ்வலிங்கம் (ஊரெழு), சண்முகப்பிரியா கனகரட்ணம் (புத்தூர்),டிலானி கந்தசாமி (யாழ்ப்பாணம்),தீபா புஸ்பராஜா (அளவெட்டி),யொய்ஸ்வில்லியம் கெப்சிபா (உரும்பிராய்),அபிராமி சிறிகுமார் (சுண்டுக்குளி).

சுமித்திரா சரவணபவானந்தன் (சாவகச்சேரி), சுரேகா பத்மநாதன் (அல்வாய் தெற்கு, அல்வாய்),குணசாந்தன் சூரியகுமாரன் (சுழிபுரம்), ரவீந்தர் விஜயராஜா (யாழ்ப்பாணம்), பிரேமசங்கர் கலையரசன் (வட்டுக்கோட்டை), சஞ்சீவன் பத்மநாதன் (கோப்பாய்),கபில்ராஜ் சந்திரசேகரன் (மானிப்பாய்), ஆதவன் மகாலிங்கம் (சுன்னாகம்),கிரிசாந்தன் சுந்தரலிங்கம் (யாழ்ப்பாணம்),சிறிசாந் சிறிசயந்தராஜ் (மானிப்பாய்),

சுந்தரநாத் பரமசாமி (சாவகச்சேரி), நவசாந்தன் நவரட்ணம்(சுன்னாகம்),விஜய ஐங்கரன் விசாகபெருமாள் (இளவாலை), மதுசுதன் குமாரசாமி (கோண்டாவில்),வக்கிரன் காசிநாதன் (சுன்னாகம்), மயூரன் நாகேஸ்வரன் (இருபாலை),ஜெயபிரதீப் மரியநாயகம் (சுன்னாகம்),சுதர்னன் நாகராசா (கைதடி), கௌரிசங்கர் கணேசமூர்த்தி (கைதடி), கிரீந்திரன் தனபாலசிங்கம் (கோப்பாய் மத்தி, கோப்பாய்), நிசாந்தன் கதிரவேலு (மீசாலை), கோகிலன் கோபாலபிள்ளை (காரைநகர்),ஜானகி பிரபாசிங்கம் (கரவெட்டி),சரண்யா கிருஸ்ணமூர்த்தி (மானிப்பாய்),கீதாசினி விநாயகமூர்த்தி (பண்டத்தரிப்பு). (2-6)

# யாழ்.மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் கேபிள் பொருத்தும் பணிகள்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கேபிள் பொருத்தும் பணிகளினை ஶ்ரீலங்கா ரெலிக்கொம்மின் பிராந்திய அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் நல்லூர், பருத்தித்துறை, கரவெட்டிகிழக்கு, கரவெட்டி மேற்கு, கரவெட்டி மத்தி ,கரணவாய் ,திக்கம் , பொலிகண்டி,கொத்தவலை ஆகிய இடங்களில் தற்போது புதிதாக கம்பங்கள் நாட்டப்பட்டு கேபிள்கள் பொருத்தப்பட்டு வருகின் றன.

அத்துடன் மாசியப்பிட்டி ,கந்தரோடை, வண்ணார் பண்ணை போன்ற இடங்களில் கேபிள்பொருத்தும் பணிகள் பூர்த்தியடைந்து இணைப்புக்கள் கொடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கே.கே.எஸ். வீதியில் இருந்து திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி வரைக்கும் மற்றும் பிறவுண் வீதி ஆகிய இடங்களுக்கு இன்னும் 2 ,3 மாதங்களில் கேபிள்கள் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய பரிவர்த்தனை நிலையங்கள் மானிப்பாய்,கோப்பாய்,சாவகச்சேரி ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ளது. கேபிளின் வயறினை வெட்டி வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் அல்லது அதற்கு சேதம் விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் இவ்வாறு சேதத்தினை ஏற்படுத்துவோர் யாரையேனும் பொது மக்கள் கண்டால் பிராந்திய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (6-30)

# சிறுபான்மையின மக்களின் வசம் 30 வீதமான வாக்குபலம் உள்ளது
## இடது சாரி முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உண்மையான கிங் மேக்கர்கள் சிறுபான்மையின மக்களே ஆகும். அவர்கள் வசம் நூற்றுக்கு 30 வீதமான வாக்கு பலம் உள்ளதென இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி தெரிவித்தார்.

சிறுபான்மையின மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலான விருப்பு வாக்கு முறைமை திருத்தத்திற்கு ஆதரவு வழங்க இடதுசாரி முன்னணி தயாரென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜய நித்தி மேலும் தெரிவிக்கையில் ,

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் சிங்கள மக்களின் வாக்குகள் மட்டுமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வெற்றியை பெற்றுக்கொடுத்ததாக சிலர் பிதற்றுகின்றனர்.

இக்கூற்று உண்மைக்கு புறம்பானதாகும். இத்தேர்தலில் வடக்கு -கிழக்கில் வாழும் தமிழ் ,முஸ்லிம் மக்கள் முழுமையாக வாக்களிக்கவில்லை. நூற்றுக்கு 15 வீதமானவர்களே வாக்களித்தனர்.

அப்பிரதேசங்களில் வாக்காளர்களில் 80 சதவீதமானோர் வாக்களித்திருப்பார்களானால் முடிவுகள் மாறியிருக்கும்.

ஆனால் அம்மக்கள் வாக்களிப்பது அரசு மேற்கொண்ட அச்சுறுத்தல் நடவடிக்கைகளால் தடுக்கப்பட்டது.

இதுதான் உண்மை. ஆனால் ஒரு சிலர் தமிழ் ,முஸ்லிம் மக்களின் வாக்குப் பலத்தை சீண்டிப் பார்க்கின்றனர்.

தேர்தலின் முடிவுகள் உண்மையை வெளிப்படுத்தி நிற்கவில்லை. அனைத்து முடிவுகளிலும் சித்து விளையாடியுள்ளது.

இதற்கெதிராக நாட்டில் எதிர்ப்புக்கள் தலைதூக்கியுள்ளன. தேர்தல் முடிவுகள் சிங்கள மக்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சார்ந்தோரே மூக்கில் விரலை வைக்கின்றனர்.

அன்று சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முதாவதாக ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் போது சிங்கள மக்கள் மட்டுமல்லாது தமிழ் மக்களினதும் ஏகோபித்த ஆதரவு கிடைத்தது.

ஏனென்றால் வெண்புறாவை காண் பித்து சமாதானத்தை ஏற்படுத்துவதாக உறுதியளித்தே தேர்தலில் குதித்தார்.

அவ்வாறானதோர் சூழ்நிலையிலும் நூற்றுக்கு 62 சதவீத்ததிலேயே வெற்றி பெற்றார். இன்று உண்மைகள் உறங்குகின்றன. அதனை தட்டியெழுப்ப வேண்டிய காலகட்டத்தில் நாமிருக்கின்றோம்.

விருப்பு வாக்கு முறைமை கட்சிகளுக்குள் போட்டி பொறாமையை ஏற்படுத்துவதோடு அதன் சில ஷரத்துக்கள் நீக்கப்படவேண்டும். ஆனால் இது தொடர்பில் அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண் டும்.

அதேவேளை சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதிக்கபாதவகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அவ்வாறானதொரு சூழ்நிலையில் எமது ஆதரவை வழங்கவும் தயாராக இருப்பதாக சமல் ஜய நித்தி தெரிவித்தார். (2-6)

# விரிவான கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்து எதிர்க்கட்சிகள் கவனம் செலுத்தி வருகின்றன

(கொழும்பு)

விரிவான கூட்டணி ஒன்றை அமைத்து அதன் ஊடாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து எதிர்க்கட்சிகள் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விரிவான எதிர்க்கட்சி அரசியல் கூட்டமைப்பு ஒன்றை அமைப்பது குறித்து இந்த வாரத்தில் தீர்மானிக்கப்படும் என குறிப்பிடப்படுகிறது. ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் முன்னணியின் தலைவர் மங்கள சமரவீர மற்றும் ஜே.வி.பி. பாராளுமன்றக் குழுத்தலைவர் அனுரகுமார திஸா நாயக்க கடந்த திங்கட்கிழமை தேர்தலில் போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அன்னப்பட்சி சின்னத்தில் போட்டியிட ஜே.வி.பி விருப்பம் தெரிவித்துளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன .

எவ்வாறெனினும் யானைச் சின்னத்தை இழந்து கூட்டணியில் இணைந்து கொள்வது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக முனைப்பு காட்டவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் பொதுத் தேர்தலின் போது வேறும் சின்னத்தில் போட்டியிட்டால் தமக்குக் கிடைக்கப் பெறும் வாக்குகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படக் கூடுமென ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். எவ்வாறெனினும் யானைச் சின்னத்தில் ஜே.வி.பி. போட்டியிடுவதிலும்சிக்கல் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் நடவடிக்கை

(கொழும்பு)

துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்து ஏனைய மாவட்டங்களில் உறவினர், நண்பர்களுடன் தங்கியிருந்து முல்லைத்தீவு கச்சேரியில் பதிவு செய்து அனுமதிச் சீட்டைப் பெற்ற் அனைவரையும் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்தோர் நாளை காலை 7 மணிக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்தோர் எதிர்வரும் 7ஆம் திகதி காலை 7 மணிக்கும் சொந்த இடத்திற்கு செல்லும் ஆயத்தங்களுடன் வவுனியா நகர சபை மைதானத்துக்கு வருமாறு முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். (6)

# தொடர்ந்து தி.மு.கவை விமர்சிக்க எமது கட்சிக்கு விருப்பமில்லை

## ராமதாஸ் தெரிவிப்பு



தி.மு.கவை தொடர்ந்து விமர்சனம் செய்ய விருப்பமில்லை என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் எஸ்.ராமதாஸ் கூறினார்.

ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றவே பா.ம.க. விமர்சனம் செய்துவருகிறது. இதற்காக இதனை கடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க வஞ்சம் தீர்த்து கொண்டது என்று அவர் கூறினார். தருமபுரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது,

பென்னாகரம் இடைத்தேர்தல் அறிவிப்பு இவ்வாரத்தில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தேர்தலில் மைக்ரோ திட்டம் என்ற புதிய தேர்தல் முறையை பா.ம.க வைத்துள்ளது.

இத்தொகுதியில் 45 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் நாங்கள் வெற்றி பெறுவோம். நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் எம்முடன் இணைந்து வருகின்றனர். தே.மு.தி.கவில் இருந்து பலரும் பா.ம.க.வில் இணைந்து வீருகின்றனர். அ.தி.மு.க.வின் தேர்தல் களம் குறித்து கவலைப்பட தேவையில்லை என்றார். (2-6)



மகாசிவராத்தியை முன்னிட்டு சென்னையில் அரியவகை உருத்திராட்சை கண்காட்சி தொடங்கியது. இதில் நெற்றிகண் உருத்திராட்சை, 1 வைரங்கள் பொறிக்கப்பட்ட ஏகமுக உருத்திராட்சைகள், 75 இலட்சம் ரூபாய் மதிப் புள்ள 21 முகங்கள் கொண்ட இந்திரமாலை உருத்திராட்சைகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

# ப.சிதம்பரத்திற்கு மாவோயிஸ்டுகள் கொலை மிரட்டல்

(புதுடில்லி)

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். நாடு முழுவதும் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளாவிட்டால் அதற்கு பழிவாங்கும் வகையில் ப.சிதம்பரம் மீது தாக்குதல் நடத்துவோம் என்று எழுதப்பட்ட துண்டு பிரசுரங்களை மாவோயிஸ்டுகள் விநியோகித்து இருப்பதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது பற்றி மத்திய பாதுகாப்பு அமைப்புகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# தி.மு.க.ஆட்சியில் புதுப்புது நோய்கள் பரவுகின்றன

## அ.தி.மு.க.குற்றச்சாட்டு

(சென்னை)

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழகத்தில் புதுப்புது நோய்கள் பரவி வருவதாக அ.தி.மு.க. குற்றஞ்சாட்டியுள்ளது. தமிழகத்தில் பரவி வரும் மர்மக் காய்ச்சலைத் தடுக்கக் கோரியும் சென்னையில் நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த வலியுறுத்தியும் அ.தி. மு.க. சார்பில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரேசுடந்தசெவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை வகித்த அக்கட்சியின் அவைத் தலைவர் இ.மதுசூத னன் பேசியதாவது,

ஆளும் கட்சிக்கோ, சென்னை மாநகராட்சிக்கோ வடசென்னை பகுதி மக்களின் பிரச்சனைகள் குறித்து எவ்வித அக்கறையும் கிடையாது. வடசென்னையில் பல இடங்களில் குடிநீருடன் கழிவு நீர் கலக்கிறது. இதனால் மக்களின் உடல் நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் முதலில் டெங்கு காய்ச்சல் பரவியது. அடுத்து பறவைக் காய்ச்சல் தொடர்ந்து சிக்குன் குனியா, பன்றிக் காய்ச்சல் என பல நோய்கள் பரவின. இப்போது தமிழகமெங்கும் மர்மக் காய்ச்சல் பரவி வருகிறது. இந்த நோய்களைக் கட்டுப்படுத்த தமிழக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சென்னை நகரில் தினமும் படுகொலைகள் நடைபெறுகின்றன. வடசென்னை பகுதியில் கோயில்களில் கொள்ளை நடை பெறுகின்றது. இச்சம்பவங்களில் தொடர்புடைய குற்றவாளிகள் யார் என்பது காவல் துறைக்கு தெரியும் ஆனால் யாரும் கைது செய்யப்படுவதில்லை இத்தகைய சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்த தமிழக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழகத்தில் நிலவும் இத்தகைய அவலங்கள் நீங்க மீண்டும் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க.ஆட்சி மலர வேண்டும். அந்நிலை விரைவில் வரும் என்றார். ஆர்ப்பாட்டத்தில் 500ற்கும் மேற்பட்ட பெண்கள் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# கை நழுவிப் போனது ஒஸ்கார் விருது

கடந்த ஆண்டு ஸ்லம்டக் மில்லினர் படத்தில் இசை அமைத்ததற்காக 2 ஒஸ்கார் விருதுகளையும் 2 கிராமி விருதுகளையும் ஏ.ஆர்.ரகுமான் வென்று சாதனை படைத்து இருந்தார். இந்த ஆண்டுக்கான ஒஸ்கார் விருது போட்டிக்கும் கப்பிள்ஸ் ரிட்ரீட் என்ற படத்தில் ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்துள்ள நா நா என்ற பாடல் அனுப்பபட்டு இருந்தது. இது தமிழ் பாடலாகும். இதை ஏ.ஆர் ரகுமானே எழுதி இருந்தார். அவர் எழுதிய முதல் பாடல் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பாடலை ரகுமானின் 8 வயது மகன் ஏ.ஆர்.அமீன் பாடியுள்ளான்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள பிவெர்லி ஹில்ஸ் என்ற இடத்தில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் ஒஸ்கார் விருது போட்டிக்காக தேர்ந்து எடுக்கப்பட்ட பாடல்களை நடிகை ஆனிஹதாவே அறிவித்தார். அதில் ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்த பாடல் போட்டிக்கான தேர்வில் வெற்றி பெறவில்லை. இதனால் ஒஸ்கார் விருது போட்டிக்குள் ரகுமான் நுழையும் வாய்ப்பு கைநழுவி சென்றது. (2-6)

# செங்கல்பட்டிலுள்ள இலங்கை அகதிகள் விடுதலை செய்யக்கோரி போராட்டம்

செங்கல்பட்டில் உள்ள அகதிகள் சிறப்பு முகாமில் இலங்கையைச் சேர்ந்த பலர் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் முகமது ருக்சான், சேகர், ரமணா ஆகிய மூன்று அகதிகள் நேற்று முன்தினம் மாலை தங்களை விடுதலை செய்யக்கோரி அங்குள்ள மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து திடீர் போராட்டம் நடத்தினர்.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்து சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் ஒருவர் மட்டும் கீழே இறங்கி வந்து விட்டார். மற்ற இருவரும் மரக்கிளையிலேயே உட்கார்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (2-6)

## பாரதச் செய்திகள்



# இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்குமாறு ஆர்ப்பாட்டம்

## சென்னையில் நடைபெற்றது



மீன்பிடி தொழில் ஒழுங்குமுறை சட்டத்தை கைவிட் வேண்டும். இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீனவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கட்சியினர், சென்னை சைதாப்பேட்டையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மாநில செயலாளர் என்.வரதராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட் டத்தில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பின்னர் வரதராஜன் தலைமை யில் கட்சி நிர்வாகிகள் ஆளுநர் மாளிகைக்கு சென்று ஆளுநரின் செயலாளரிடம் மனு கொடுத்தனர்.

இதுகுறித்து வரதராஜன் கூறுகையில்,

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற் படையினரின் தாக்குதல் தொடர்கிறது. இதை தடுக்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மீன்பிடி தொழில் ஒழுங்கு முறை சட்டத்தை முழுமையாக கைவிட வேண்டும். இதற்காக மாநிலம் முழுவதும் போராட்டம் நடத்தப்படும் என்றார்.

ஆர்ப்பாட்டம் முடிந்த போது மார்க்சிஸ்ட் கட்சியினர் திடீரென மறியலில் ஈடுபட்டு, மத்திய அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். இதையடுத்து, வரதராஜன் உட்பட 300 பேர் கைது செய்யப்பட் டனர். (2-6)

# நிலமோசடி தொடர்பாக நடிகர் வடிவேலு புகார்

(சென்னை)



தன்னுடன் இருந்த சிலர் தன்னை ஏமாற்றி, பல கோடி ரூபாய் மதிப்பில் நில மோசடி செய்துள்ளதாக நடிகர் வடிவேலு சென்னை பொலிஸ் ஆணையாளரிடம் புகார் செய்தார்.

இது குறித்து மத்திய குற்றப்பிரிவு துணை ஆணையாளர் ஸ்ரீதர் கூறும்போது, நடிகர் வடிவேலு தன்னுடன் நடிக்கும் சிலர், நில மோசடி செய்து ஏமாற்றியது குறித்து புகார் தெரிவிப்பதற்காக வந்தார். அப்போது எழுத்துபூர்வமாக புகார் கொடுக்கவில்லை விரைவில் எழுத்துபூர்வமாக புகார் கொடுப்பதாக கூறியுள்ளார். என்றார்.

நடிகர் வடிவேலு நிருபர்களிடம் கூறியதாவது,

சினிமா படத்தில் சிரிக்க வைப்பதற்காக, கிணற்றை காணவில்லை கண்டுபிடித்துத் தாருங்கள் என பொலிசில் புகார்செய்வது போல் நடித்தேன். படத்தில் வரும் காமெடியைப் போல, என் நிலைமையும் ஆகிவிட்டது. பத்திரம் இருக்கிறது. நிலத்தை காணவில்லை என பொலிசில் புகார் கொடுக்க வந்துள்ளேன். என்னுடன் கூட இருந்தவர்கள் தான் மோசடி செய்துள்ளனர். இம்மோசடியின் மதிப்புபல கோடி ரூபாய் இருக்கும். என்னுடன் இருந்த சிங்கமுத்து உட்பட இரு சக நடிகர்கள் தான் மோசடி செய்துள்ளனர்.


இது தொடர்பாக பொலிசார் விசாரணை நடத்தி உங்களுக்கு தெரிவிப்பர். அதற்கு மேல் எதுவும் கேட்காதீர்கள். முதலில் புகார் செய்ய வேண்டாம் என்று தான் நினைத்தேன். ஆனால் கடந்த சில நாட்களாக மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். அதனால் தான் மோசடி குறித்து புகார் செய்தேன்.

இவ்வாறு வடிவேலு கூறினார்.

நடிகர் வடிவேல் வீட்டில் சமீபத்தில் வருமான வரித்துறை சோதனை நடந்தது. அச்சோதனையை தொடர்ந்து வடிவேலுவுக்கு நெருக்கமான சில நடிகர்கள் அவரை ஏமாற்றி நில மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து நடிகர் வடிவேலு பொலிசில் புகார் செய்தார். நிலமோசடி தொடர்பான ஆவணங்கள் பத்திரங்களுடன் எழுத்துபூர்வமாக புகார் தெரிவிக்குமாறு நடிகர் வடிவேலுவிடம் பொலிசார் கூறியுள்ளனர். வடிவேலு விரைவில் எழுத்துபூர்வமாக புகார் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (2-6)

# டெங்கு ஆட்கொல்லி நோயிடமிருந்து எம்மையும் சுற்றத்தையும் காத்திடுவோம்



பெருகிவரும் சனத்தொகைக்கு மத்தியில் தன் கொடிய ஆதிக்கத்தை நிலைநாட்டி, பல்லாயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர் உட்பட வயது வேறுபாடின்றி அனைவரையும் காவு கொண்டுள்ள டெங்கு நோய் பற்றிய ஓர் விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டியது இன்றியமையாதாகும்.

எம் கருத்துணர்விற்கு எட்டாது டெங்கு வைரஸ் சாமர்த்தியமாக உடலினுள் உட்புகுத்தும் நுளம்பினால் இந்நோய் பரவுகின்றது. டெங்குக்காய்ச்சல் பற்றி நேர்க்குமிடத்து இது ஓர் வைரசினால் ஏற்படுத்தப்படுகின்ற நோயாகும். இவ்வைரஸானது Aedes gypti என்னும் நுளம்பினால் பரவலடையச் செய்யப்படுகின்றது. இந்நுளம்பானது இருண்ட நீர்தேங்கியுள்ள பிரதேசங்களில் குறிப்பாக வாகன ரயர்கள், இளநீர்க் கோம்பைகள், சிரட்டைகள், நீர்தேங்கியுள்ள பூச்சாடிகளில் மட்டுமன்றி சனத்தொகை கூடிய பிரதேசங்களான சந்தை, பஸ்தரிப்பிடங்களிலுள்ள நீர்தேங்கிய இடங்களிலும் பெருக்கமடைகிறது. இவை பாடசாலை வளாகங்களில் காணப்பட்டு மாணவர்களிற்கு தொற்றலை ஏற்படுத்தலாம்.

இந்நுளம்பானது பெரும்பாலும் பகல் வேளைகளில் மனிதர்களைக் கடிக்கின்றது. இக்காரணத்தினால் மேற்குறிப்பிட்ட இடங்களில் நுளம்பின் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

இந்நுளம்பினால் காவப்படுகின்ற வைரசானது 1, 2, 3, 4 என்னும் நான்கு வகைகளைக் கொண்டுள்ளது. எந்த ஒரு நபரும் ஏதாவது ஒரு வகை டெங்கு வைரசால் முதலாவது தடவை காய்ச்சலுக்குள்ளாகும் போது நோயின் தாக்கம் மிகக்குறைவாகவும் அக்குறித்த நபர் அந்த வகை டெங்கு வைரசிற்கு எதிராகவே மட்டும் நிர்ப்பீடனத்தைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இரண்டாவது-மூன்றாவது தடவை வேறு ஒரு வகை டெங்கு வைரசின் ஆதிக்கத்திற்குட்படும் போது மிகப் பாரதூரமான விளைவுகளே ஏற்படுகின்றது. இது சிலவேளைகளில் மரணத்தை ஏற்படுத்துகின்றது.

நோயின் அறிகுறிகள் என நோக்குமிடத்து அதிகரித்த உடல் வெப்பநிலை (வெப்பநிலை வீச்சு வேறுபடலாம்) கடுமையான தலைவலி, கட்கோளப் பகுதிகளில் கடுமையான வலி, தலைகள் மற்றும் மூட்டுகளில் வலி, உடற்பகுதிகளில் சிவப்பு நிறப் புள்ளிகள், உடலும் வாய்ப்பகுதியும் சிவப்பு சிறமாகத் தோன்றலாம். காய்ச்சலானது 2-7 நாட்கள் நீடித்து சிலரில் எந்தவிதமான பக்கவிளைவுகளுமின்றி குறைவடையலாம். சிலரில் குருதியுறைதல், பொட்டுக்கள் ஏற்படத் தொடங்கலாம்.

எனவே காய்ச்சல் காலப்பகுதியில் போதியளவு நீராகாரம் கொடுத்தல் இன்றியமையாதது. அத்துடன் பழச்சாறு மற்றும் பால் கொடுப்பது நீர்ச்சமநிலையைப் பேணுவதுடன் தேவையான கலோரியையும் சக்தியையும் அளிக்கிறது.

இக்காலப் பகுதியில் சிறுநீரின் அளவைக் கணிப்பதன் மூலம் நீர்ச்சமநிலையும் அவதானிக்கப்படல் வேண்டும். சிவப்பு நிறக் குளிர்பானம் மற்றும் உணவு வகைகளினை உண்பதைத் தவிர்த்தல் அவசியமாகும். ஏனெனில் நோயின் தாக்கதால் உருவாகும் வாந்தி இரத்தம் கலந்ததா/ உட்கொண்ட உணவுப் பொருளினதா என வேறுபடுத்தியறிதல் மிகக்கடினமாகும்.

Dengue Hemorrhagic காய்ச்சல் ஏற்படுமிடத்து கடுமையான வயிற்றுநோ, குறிப்பாக வலது புறமாகவும் இக்காலப் பகுதியில் சிறுநீரின் வெளியேற்றமும் குறைவடையும் உடற்பாகங்கள் மிகக் குளிராகவும், சோர்வடைந்தும் காணப்படலாம். குருதிப் பரிசோதனை செய்யுமிடத்து குருதிச் சிறுதட்டுகளின் அளவும் குறைந்த நிலையில் காணப்படும். வெண்குருதிச் சிறுதுணிக்கையின் அளவு 4000/dlலும் குறைவாகவும் (சாதாரணமாக 4000/dl-11000/dl) காணப்படுதல் டெங்குக் காய்ச்சலினைக் கண்டறிய உதவுகின்றது.

குருதிச்சிறுதட்டின் அளவு குறைதல் டெங்கின் தாக்கத்தினைக் காட்டும். எனவே நேரத்தை வீணாக்காது டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்போர் என சந்தேகிக்கப்படுமிடத்து அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். அத்துடன் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நோய் வருமுன் எம்மைப் பாதுகாத்திடலாம். சுற்றாடல் மற்றும் பொது இடங்களில் நீர்தேங்கியுள்ள பிரதேசங்களினை அப்புறப்படுத்தி நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

நுளம்புவலை மற்றும் நுளம்புத்திரி, கடித்த உடலை, முற்றும் போர்த்திய ஆடைகளை அணிதல் தனிநபர் ஒவ்வொருவரையும் பாதுகாத்திடும் வழிமுறையாகும். தாமதிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் நோயின் தாக்கத்தை அதிகரிப்பதால் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது வைத்தியசாலைக்கு விரைந்திடுவீர்.

**செல்வி பி. சிந்துயா**

# முகாமில் எஞ்சியுள்ள மக்கள் தொடர்பாக அரசாங்கம் முன்னுரிமை அளிக்கவேண்டும்

**ஜெயலத் ஜெயவர்த்தன எம்.பி.**



(கொழும்பு)

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள எஞ்சிய மக்களை அரசாங்கம் உடனடியாக மீள்குடியேற்ற வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். மேலும் ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் நிலைமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஜெயலத் ஜெயவர்த்த எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது: ஜனவரி 31ஆம் திகதிக்குள் அனைத்து அகதி மக்களையும் மீள்குடியேற்றிவிடுவதாக அரசாங்கம் கூறிவந்தது. அதாவது 180 நாட்களில் மீள்குடியேற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் தற்போது 180 நாட்கள் கடந்துள்ளன. எனினும் இன்னும் அகதி முகாம்களில் மக்கள் எஞ்சியுள்ளனர். எனவே அவர்களை உடனடியாக மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதுடன் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

இந்தப் பிரச்சினையை முன்னுரிமை அடிப்படையில் அணுகுமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம். இதேவேளை ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கான வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

முக்கியமாக அந்த மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும். வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதில் அவர்களுக்கு காணப்படும் சிரமங்களைத் தீர்க்க வேண்டும்.

மீள்குடியேற்றப்பட்டுள்ள அகதி மக்கள் தமது வாழ்க்கைத் தொழிலை கொண்டு நடத்துவதில் பல சிரமங்களை எதிர்கொள்வதாக அறிகின்றோம். எனவே அவற்றுக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி எப்போதும் அனைத்து இன மக்களினதும் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் கட்சியாகும். நான் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தேர்தலில் போட்டியிடுவதில்லை. எனினும் அந்த மக்களுக்காக குரல் கொடுப்பதை நிறுத்தமாட்டேன் என்றார்.

மேலும் இடம்பெயர்ந்த மக்களை மீளகுடியேற்றும் செயற்பாட்டுக்கு உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச நிறுவனங்கள் தயாராக இருக்கின்றன. அரசாங்கம் அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். (2-6)

## பூநகரியில் மக்கள் மீளக்குடியமர்வு

கிளிநொச்சி- பூநகரிப் பகுதியில், நேற்று முன்தினம் நலன்புரிக் கிராமங்களிலிருந்து ஒரு தொகுதி மக்கள் மீள்குடியர்த்தப்பட்டனர் என மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்கமைய 1200 பேர் மீள்குடியர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மீள்குடியமர்த்தப்படும் இம்மக்களுக்கு அவர்களின் வாழ்வாதார உதவியாக கடற்றொழில், விவசாய உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (2-9)

## நிசாவால் பாதிக்கப்பட்டோருக்கு மீன்பிடி வலைகள் கையளிப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள மூன்று கிராம அலுவலர் பிரிவில் நிசாவால் பாதிக்கப்பட்ட 140 பேருக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைய மணற்காடு கிராம அலுவலர் பிரிவில் 76 பேருக்கும் குடத்தனைகரையூர் கிராம அலுவலர் பிரிவில் 35 பேருக்கும் பொற்பதி கிராம அலுவலர் பிரிவில் 29 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக அண்மையில் நடைபெற்ற மருதங்கேணி உதவி அரசாங்க பணிமனை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பருத்தித்துறை கடற்றொழில் பரிசோதகர் ஜே. சுதாகரன் தெரிவித்துள்ளார். (1-35)

# வடக்கு மாகாண சபை நிறுவப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கிறோம்

**விமல் வீரவன்ச தெரிவிப்பு**



வடக்கு மாகாண சபை நிறுவப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தேசிய சுதந்திர முன்னணி இருக்கின்றது. அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.


வடக்கு மாகாண சபை அமைக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:- மாகாண சபை முறைமை அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ளது. அதனடிப்படையில் கிழக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டு அங்கு மாகாண சபை இயங்குகின்றது. கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டபோது நாங்கள் அதனை எதிர்க்கவில்லை.

எனவே அதே நிலைப்பாட்டில் வடக்கு மாகாண சபையும் இயங்கவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். வடக்கு மாகாண சபை இயங்க வேண்டும் என்பது இன்றைய தேவையாகவுள்ளது. எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். எதிர்காலத்தில் அரசியலமைப்பு மாற்றத்துடன் எவ்வாறான முறைமைகள் வரும் என்பதனை அப்போது ஆராயலாம் என்றார். (2-6)

# மகாசிவராத்திரி எப்போது? ஐயந்தெளிவு பெறுவோம்

(நேற்றைய தொடர்ச்சி...)



சூரியன் கும்பராசியில் இருக்கும் பொழுது கிருஷ்ணபசஷத்ததில் திரியோதசி சதுர்த்தசிகளோடு கூடிய அந்த நிசியில் சிவராத்திரி விரதமனுட்டித்து மறுதினம் பாரணை செய்க. சாந்திரபசஷத்தில் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்தால் அந்தத் தேசத்து ஜனங்களுக்கும்; ராஜாக் களுக்கும் சிவராத்திரி விரதமனுஷ்டிப்பவர்களுக்கும் ரௌரவ நரகமுண்டாம்.

இத்தியாதிபதி பிரமாணங்களினாலே சிவராத்திரி விரதம், பூசை, உற்சவங்கள் சௌர மாதத்திலேயே செய்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

நவராத்திரி, கந்தசஷ்டி விரதங்கள் சந்தேகத்துக்கிட மின்றிச் சாந்திரமாதத்திலும், சிவராத்திரி சௌரமாதத்திலும் நடைபெற்று வருதல் வேண்டுமென்பது ஆகம விதிகளால் நிச்சயமாகின்றது.

சிவபெருமானது திருமுகங்களிலிருந்து தோன்றிய சிவாகமங்கள், நித்தியம், நைமித்தியம், காமியம் என்ற பூஜைகளையும் அவற்றை அனுஷ்டிக்க வேண்டிய முறைகளையும் கூறுகின்றன. அவ்வாகமங்களில் கூறப்பட்ட முறைக்கு மாறுதலாகச் செய்வது தீங்கு என்றும் தவறாக அனுஷ்டித்தால் அதற்குப் பிராயச்சித்தமும் அவ்வாகமங் களிலேயே கூறப்பட்டிருக்கிறது.

ஆலயங்களில் சிவராத்திரி மகோட்ஸவம் முதலியவைகள் சௌரமாதத்திற் செய்ய வேண்டும் என்று ஆகமவிதி கூறுகின்றது. சிவராத்திரி பூஜையை நிர்ணயஞ் செய்யும் வசரணரத்னாவளியில் ஆவணி மாதத்தில் ஸ்ரீ ஜெயந்தி முதல் எண்ணி, 184ஆவது நாள் சிவராத்திரி என்று கணக்கிட்டுக் கூறும் வாக்கியம் வருமாறு:-

சிம்ஹேசரவிசம்ப்பராப்தே ரோஹிணீஸஹிதாஷ்டமீ
ததாதிகணனம்கிருத்வா சாசீதிசதுருத்தாரா!
சதோபேததினாந்தேது சிவராத்ரிரிதிஸ்மிருதா!

அதாவது ஆவணி மாதத்தில் ரோஹிணிநசஷத்திரத் துடன் கூடிய அஷ்டமி என்று வருகிறதோ அத்தினம் முதற் கொண்டு நூற்றெண்பத்து நான்காவது நாள் சிவராத்திரி யாகும் என்பதாம். இந்த ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி ரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய அஷ்டமி (11-09-09) முதற் கொண்டு 184ஆவது நாள் மாசி மாதம் 29ஆம் திகதி (13-03-2010) வருகிறது. ஆகவே மேலே உள்ள சுலோகப் படி மாசி மாதம் தான் சிவராத்திரி ஆகிறது. ஆகையால் சிவராத்திரி விரதானுஷ்டாணம் சௌரமாத ரீதியில் மாசி மாத்தில் தான் அனுஷ்டிக்க வேண்டும்.

**2010ஆம் ஆண்டின் மகாசிவராத்திரி எப்போது என்ற குழப்பத்தைத் தவிர்க்க *மெய்கண்டார்* என்ற நூலில் எழுதப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

ரௌரவகும்பங்கதே பூர்வ மகாராந்தே ப்ரபூஜயெத் - என்னும் பூர்வகாரணாகாம வாக்கியத்துக்கு சூரியன் கும்ப ராசியையடைந்த பொழுது தை மாதக் கடைசி தினத்தில் பூஜிக்க வேண்டும் - என்பதே அர்த்தமாகும். உத்தரகாரணா கமத்து இரண்டாவது சுலோகத்தில் மாகபால் குணயொ: கிருஷ்ண சதுர்த்தஸ்யாம் சுபேதினே - என்றிருக்கிறதே தவிர புஷ்யமாகயோ: என்று வந்திருக்கிறதா என்பதைக் கவனிக்கவும். இதற்கு மாகமாதத்தில் (மாசியில்) பால் குணத்தில் (பங்குனியில்) என்று தான் அர்த்தமாகும்.

ராத்திரி எட்டாவது பாகத்திருக்கிற திரயோதசியில் சதுர்த்தசி கூடினாலும் சிவராத்திரி என்பது விஜயாகமம். இதற்கு விரோதம் சுவாயம்புவம்: முதல் நாளோ மறு நாளோ சதுர்த்தசி அதிகமாயிருந்தால் சிவராத்திரி என்று கூறும். இதற்கு விரோதம், சந்தானாகமம், சதுர்த்தசி பூரணமாகவும் அ மாவாசையானது கலையளவாயிருக்கின்ற சிவராத்திரியானது கர்மத்தை நாசஞ் செய்யும் என்பதாம்.

இனி வித்தியா வார்த்திகத்தில் மோசஷசாதனலசஷணத் திலுள்ள சிவராத்திரி நிர்ணயத்தில் மாத நிர்யணஞ் செய்திருப்பதை இங்கே காணலாம்.

அச்சுலோகம்:

கும்பஸ்தா கடமீன காமகர கும்பஸ்தா நிசாயாம் திதி:
மீனஸ்தா விஹிதிதொத்தராயதி நபூர்வாகப்ர தானக்ரகா
சந்தயாயாமிவ ஸாந்திய கர்ம தபசிப்ரோகதம் தபோப்
யர்ச்சனம் பத்ரே
சாபக புஷ்யவன் மகரகம்தயா ஐயம் தபஸ்தத் வ்ரதே!

என்பதாம். இதன் பொருள் கிருஷ்ண பட்ச சதுர்த்தசி ராத்திரியில்

அ) மாசி மாத சம்பந்தம் மாத்திரம் உடையது.
ஆ) மாசி, பங்குனி மாத சம்பந்தம் உடையது.
இ) தை, மாசி மாத சம்பந்தம் உடையது.
ஈ) பங்குனி மாத சம்பந்தம் மாத்திரம் உடையது என நான்கு வகைகளில் சிவராத்திரி மாத நிர்ணயம் அமைகிறது.

அ) முதல் பிரிவு இல்லாத விடயத்தில் இரண்டாவது பிரிவு விதிக்கப்பட்டு இருக்கிறது. இரண்டாவது பிரிவு இருந்தபோதிலும் முதல் பிரிவு இருக்குமேயானால் அந்த முதற் பிரிவே விதிக்கப்பட்டு இருக்கிறது. இரண்டாவது பிரிவு தள்ளத்தக்கது என்றே அர்த்தம். இதற்கு உதாரணம் நந்தன வருடம் மாசி மாதம் 30ஆம் திகதி 13-03-1953 வெள்ளிக்கிழமை திரயோதசி திதி 38.24, மீனரவி 53.05 (சுமார் அதிகாலை 3. 00 மணிக்கு) எனக் குறிப்பிட்டிருப்பினும் அன்று மாதசிவராத்திரி என்றே பஞ்சாங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. மேற்கூறிய விதிப்படி இரண்டாவது பிரிவு மாசி, பங்குனி மாத சம்பந்தமுடையது. இருந்தபோதிலும் முதல் பிரிவு மாசிமாத சம்பந்தமுடையதான 12-02-1953இல் மாசி மாதம் 1ஆம் திகதி வியாழக்கிழமை திரயோதசி திதி 12.27 கும்பரவி 4.41 (காலை மணி 7.45இற்கு) என உள்ளதையே மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

**தே. சுடலைமுத்து**
தலைமையாசிரியர்
ஆதீன நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை.

ஆ) மாசி சங்கிராந்தியானது பகலில் வருமானால் அப்பொழுது இராத்திரி முழுவதும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியானது மாசி மாதத்தில் இருக்கிறதாக ஆகும். அது முதல் மாசி மாதமே ஆதலால் மிகவும் மேன்மையானது. உத்தமோ உத்தமமாகும். இதற்கு உதாரணம் நந்தன வருடம், மாசி 01-12-1953, வியாழன், கும்பரவி 4.41 (காலை மணி 7.45இற்கு) மாதப் பிறப்பு. அந்த சிவராத்திரி மேற்சொன்ன சிவராத்திரி இல்லாத பட்சத்தில் ராத்திரியில் மாசி, பங்குனி இரண்டு மாத சம்பந்தத்தை உடையதான சிவராத்திரியானது மாசி மாதத்தின் கடைசித் திகதி ராத்திரியில் பங்குனி மாத பிறப்பு ஆகும்.

அப்பொழுதும் மாசி மாதத்தின் கடைசி தினமே அப்படி இருந்தபோதிலும் ராத்திரி பாகத்தில் பங்குனி மாத சம்பந்தத்தால் உத்தமம் என்று கூறப்படும். (இவ்விடயத்தில் மாகபால் குணயோ : கிருஷ்ண சதுர்த்தஸ்யாம் சுபேதிநே மேற்சொன்ன இரண்டாவது சிவராத்திரி இல்லாத பட்சத்தில் என்பது பொருத்தமுடையதென அறியப்படும்) (தொடரும்)

---

## மீன் எண்ணெய் மாத்திரைகளை உபயோகித்தால் மனநிலை பாதிப்புக்களிலிருந்து விடுபடலாம்

### ஆய்வொன்றில் தகவல்

உளவியல் ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்குவோருக்கு மீன் எண்ணெய் மாத்திரைகளை வழங்க முடியும் என ஆய்வுத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதற்கமைய நாள்தோறும் மீன் எண்ணெய் மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் மனநிலை பாதிப்புக்களைத் தவிர்க்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக இதனை உட்கொண்ட நோயாளர்கள் சிறந்த பயனை அடைந்துள்ளதாகவும் குறிப்பாக ஸிஸோபோர்னியா போன்ற உளவியல் தாக்கங்களிலிருந்து விடுபடுவதற்கு மீன் எண்ணெய் மாத்திரைகள் உதவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீன் எண்ணெய்யில் ஒமெகா -3 என்ற இரசாயன பதார்த்தம் காணப்படுவதாகவும் இது ஆரோக்கியமான இருதயம் மற்றும் மூளைக்கு மிகவும் அத்தியாவசியமானதெனவும்,

மனநிலை பாதிப்பு தொடர்பில் பயன்படுத் தப்படும் அநேகமான மருந்துப் பொருட்கள் பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை என்ற போதிலும் மீன் எண்ணெய் அவ் வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தாதென தெரிவிக்கப்படுகின்றது.

ஒஸ்ட்ரியா, அவுஸ்திரேலியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த ஆய்வினை முன் னெடுத்துள்ளனர்.

மனநிலை பாதிப்பு ஏற்படக்கூடிய அச் சுறுத்தல் நிலவும் நபர்கள் மீன் எண்ணெய் மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் பாதிப்பினைத் தவிர்க்க முடியும் எனத் தெரி விக்கப்படுகிறது.

(2-6)

---

கனடாவிற்கான

## நுழைவு அனுமதி விண்ணப்ப நிலையம் கொழும்பில் திறந்து வைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் உள்ள கனடா தூதரகம் கொழும்பில் நுழைவு அனுமதி விண்ணப்ப நிலையத்தை திறந்துள்ளது. இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் வசிக்கும் மக்கள் தமது விண்ணப்பத்தை இந்த அலுவலகங்களில் சமர்ப்பிக்க முடியும் என்று அறிவித்துள்ளது.

நுழைவு அனுமதிக்கான இந்த நிரந்தர விண்ணப்ப நிலையம் கொழும்பில் உள்ள 51 ஏ தர்மபால மாவத்தையில் திறந்து வைக் கப்பட்டுள்ளது. நுழைவு அனுமதிக்கான சேவைகளை வழங்கும் நிலையத்தை இலங் கையில் உள்ள கனடா தூதரகம் திறப்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்த நிலையத்தில் நுழைவு அனுமதி களைப் பெறுவதற்கான தகவல்களைப் பெறுதல், தற்காலிக நுழைவு அனுமதிப்பத் திரங்களைச் சமர்ப்பித்தல், விண்ணப்பங் களுக்கான கட்டணங்களைச் செலுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் அங்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை கனடா தூதரகத்திற்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் மேலதிக விபரங்களை இலங்கையில் உள்ள கனடா தூதரகத்தின் (www.SriLanka.gc.ca) இணையத்தளத்தின் ஊடாக அறிந்து கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (2-6)

இருளில் பெற்றோம்
இன்னும் விடியவில்லை.
—மேத்தா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சுதந்திர தினமா? சுதந்திர நினைவு தினமா?

இலங்கையின் 62ஆவது சுதந்திர தினம் இன்று கொண்டாடப்படுகின்றது. "சுதந்திரம்" என்பதன் காற்றைக்கூட சுவாசிக்க முடியாத மக்கள் நாட்டில் இருக்கும் போது சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெறுவது என்பது வெறும் சம்பிரதாயமான விடயமே அன்றி அதில் உள்ளார்ந்தமான பற்றுதல் ஏதும் இருக்க முடியாது.

அதிலும் 2010ஆம் ஆண்டில் நடைபெறும் 62ஆவது சுதந்திர தினத்தை எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க முடிவு செய்துள்ளன.

அவ்வாறாயின் இலங்கையின் 62ஆவது சுதந்திரதினத்தை ஆளும் தரப்பு மட்டுமே கொண்டாடவுள்ளது.

அப்படியானால் இலங்கையின் சுதந்திரம் என்பது அர்த்தமற்றதாகி விட்டதென்பது பொருள்.

குடியேற்றவாதத்தில் இருந்து 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. அந்நியர் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்ற போதிலும் உள்நாட்டில் பெரும்பான்மை இனத்திற்கும், சிறுபான்மை இனத்திற்கும் இடையே"சுதந்திரம்" தொடர்பான இழுபறி இருந்தது.

குடியேற்றவாத நாடாக இருந்த இலங்கையை அந்நியர்கள் விட்டுச் செல்லும் போது அதனைப் பெரும்பான்மையினரிடம் கையளித்தனர்.

பெரும்பான்மையினர் பெருந்தன்மையோடு நடந்து கொள்ளவர் என்ற நம்பிக்கையிலும், நாட்டின் சுதந்திர உரிமையை எங்களிடமும் தாருங்கள் எனக் கேட்பதன் மூலம் தாய்நாட்டுக்குக் கிடைக்ககூடிய சுதந்திரத்திற்கு பங்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நினைப்பிலும், சுதந்திரம் வழங்கப்பட்டபோது தமிழ் தலைமைகள் கைதட்டி வரவேற்றன.

ஆனால் ஆளும் தரப்பு தலைகீழாக நடந்து கொண்டது.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என பிரகடனப்படுத்தியது. சிறுபான்மைத் தமிழர்களை ஓரங்கட்டியது. காலத்திற்குக் காலம் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டனர். தமிழ்த் தலைவர்களின் அகிம்சை வழிப்போராட்டங்கள் அடக்கப்பட்டன. அதன் விளைவு முப்பது வருட ஆயுதப் போராட்டம்.

ஆயுதப் போராட்டம் வென்றதா? தோற்றதா? என்று மேடையேறி கேள்வி கேட்பதை விட, யுத்தத்தால் இந்த நாடு இனமத பேதமின்றி அழிவுகளை சந்தித்தது என்ற உண்மையை ஏற்றுக் கொள்வதே அவசியமானதாகும்.

ஆயுதப் போராட்டத்தை முடிபுறுத்துவதற்கு முப்பது வருடம் தேவைப்பட்டது என்று கூறுவதாயின், அதனை நிரந்தர சமாதானத்தின் மேடையில் ஏறிநின்றே கூறமுடியும். இல்லையாயின் அடுத்த முப்பது வருடத்தின் பின் மீண்டும் இந்த நாடு யுத்தத்தை சந்திக்கும் வாய்ப்பு உண்டு.

எனவே இலங்கையில் "சுதந்திரம்" என்பது சுதந்திர தினமாக அன்றி, சுதந்திரம் கிடைத்த நினைவு தினமாக மட்டுமே உள்ளது.

# இலங்கை எதிர்கொள்கின்ற இடர்களை தீர்க்க இந்தியா பக்கபலமாய் உதவி புரிகிறது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மீள் குடியேற்றப்பட்டவர்களுக்காக இந்திய அரசாங்கம் சுமார் 26 இலட்சம் ரூபா பெறுமதியான கல்வனைட் தகடுகளை வழங்கியுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு நேற்று காலி முகத்திடலில் இடம்பெற்றது. இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரிசாட் பதியுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ,

இலங்கையின் இனப்பிரச்சினைக்காக இருக்கட்டும் இலங்கை எதிர்கொள்கின்ற எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் இந்தியா அவ்வப்போது பக்கபலமாய் நின்று உதவியதை இந்த சந்தர்ப்பத்தில் நான் நினைவுகூர கடமைப்பட்டிரு க்கின்றேன்.

அதேநேரத்தில் இவ்வாறான உதவிகள் தொடர்ந்து கிடைப்பதன் ஊடாக அல்லற்படுகின்ற எங்களுடைய மக்களின் மீள் குடியேற்றத்தை நாங்கள் விரைவுபடுத்தலாம். என்ற நம்பிக்கை ஏற்படுகிறது என்றார்.

தொடர்ந்து மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்த காலத்திலும் சரி அதன் பிறகு இடம்பெயர்ந்த மக்கள் மெனிக்பாம் போன்ற பிரதேசங்களில் இருந்த பொழுது புல்மோட்டைப்பிரதேசத்திலும் வைத்திய வசதி மற்றும் இன்னோரன்ன உலர் உணவு போன்ற பல வகையான வசதிகளை எமக்குச் செய்திருக்கிறார்கள்.

வட மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்கு அவர்களுக்குத் தேவையான 2ஆயிரத்து 600 மெற்றிக்தொன் தறப்பாள் தருவதாக வாக்குறுதி அளித்தார்கள். அந்த வகையில் 300 மெற்றிக்தொன் தறப்பாள் வழங்கியிருக்கிறார்கள் . மேலும் 300 மெற்றிக்தொன் கிடைத்திருக்கின்றது . எனவே இதன் பெறுமதி 300 மில்லியன் இந்திய ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

அது மட்டுமல்லாமல் தொடர்ந்தும் எங்களுக்கு உதவிகள் வழங்குவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மடுவில் இருந்து தலை மன்னார் வரை புகையிரதப் பாதை அமைப்பதற்கும் உதவிகளை வழங்கியிருக்கிறார்கள். இன்னும் பல உதவிகளை இந்திய அரசாங்கம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்வாறான உதவிகளை வழங்கிய இந்திய அரசாங்கத்திற்கும் தூதுவருக்கும் மீண்டும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம் என்றார். (2-4)

## மாணவர்களை இனம்கண்டு வழிகாட்டலை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு சுகமடைந்து பாடசாலை வருகின்ற மாணவர்களை கட்டாயப்படுத்தி மெய்வல்லுனர் விளையாட்டுக்கான பயிற்சிகளை தவிர்த்துக்கொள்ளும் படி சுகாதார பிரிவினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது .

எனவே ஆசிரியர்கள் இது தொடர்பாக விளக்கம் பெற்றுக் கொண்டு மாணவர்களை இனம்கண்டு வழிகாட்டல்களை மேற்கொள்ளும்படி யாழ் வலயக் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (2-7)

## யாழ்ப்பாணத்திலேயே அதிகமாக டெங்கு நோயாளர்கள்

### தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரை டெங்கு நோயினால் பீடிக்க ப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 500இற்கும் அதிகம் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக இப்பிரிவு மேலும் கூறுகின்றது. யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 564 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளதென்றும் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவிக்கின்றது. (2-6)

## விசேட தோல் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இலண்டனிலிருந்து வருகை தந்துள்ள தோல் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என். இரவீந்திரன் அவர்களினால் நாளை (வெள்ளிக்கிழமை) விசேட தோல் சிகிச்சை கிளினிக் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட நோயாளர்கள் இதில் பங்குபற்றி பயன்அடையுமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (2)

## நோபல் அமைதி விருதுக்கான பரிந்துரை பட்டியலில் இன்ரநெற்

(லண்டன்)

2010 ஆம் ஆண்டு நோபல் அமைதிக்கான பரிந்துரை பட்டியலில் இன்ரநெற் இடம்பிடித்துள்ளது.

சர்வதேச அளவில் மக்கள் தொடர்பில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதால் இன்ரநெற் சேவை இந்த விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இத்தாலியில் இருந்து வெளியாகும் பிரபல பத்திரிகையான வெயர்ட் Wired இன்ரநெற்றை இந்த விருதுக்குப் பரிந்துரைத்துள்ளது.

மக்களை இணைத்து பேச்சுவார்த்தை,விவாதம், ஒரு மித்த கருத்து ஆகியனவற்றுக்கு வித்திடுவதோடு ஜனநாயகத்தையும் மேம்படுத்த ஒரு நல்ல தளமாக இன்ரநெற் திகழ்வதாக அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (2-6)

## இந்தியாவில் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் மலேசிய தமிழ் எம்.பி.

இந்தியாவில் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று மலேசிய தமிழ் எம்.பி. குணாளன் கூறியுள்ளார்.

புதிய தமிழகம் கிருஷ்ணசாமி நடத்தும் உலகத் தமிழர் மாநாடு கோவையில் நடைபெறவுள்ளது. இதற்காக மலேசியாவில் இருந்து விமானம் மூலம் மலேசிய தமிழ் எம்.பி. குணாளன், சிலாங்கூர் சிவநேசன் எம்.எல்.ஏ. மற்றும் மலேசிய தமிழ் ஆர்வலர்கள் திருச்சி வந்தனர்.

திருச்சிக்கு வந்த அவர்கள் கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமைப் பார்வையிட்டனர். அங்கு இலங்கைத் தமிழ் அகதிகளின் வாழ்க்கை தரம் குறித்து ஆய்வு செய்ததுடன் அவர்களுடன் கலந்துரையாடினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய குணாளன், மலேசியாவில் விடுதலைப்புலிகள் மீதான தடை விதிக்கவில்லை. அதேபோல் இந்தியாவிலும் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும் என்றார். (2-6)

## பகவானின் ஆறுதல்



1958ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற சுவாமியின் பிறந்த நாள் கொண்டாட்டத்தைக் கண்டு கழித்துவிட்டு வெங்கட்ராமனும் அவர் தம் குடும்பத்தாரும் பெங்களூர் நோக்கிப்புறப்பட்டனர். வழியில் அவர்களு டைய சிறிய குழந்தை கீதசுதா திடீரென மூச்சுத்திணறி சற்று நேரத்தில் எவ்வித உயிர் அசைவுமின்றி கிடந்ததால் தாய் தந்தையருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. குழந்தை இறந்து விட்டதாகவே கருதினர். பகவானே என்ன குறை செய்தோம். சுவாமி, எங்கள் குழந்தையை காப்பாற்று என்று கதறி வேண்டினர்.

அப்போது அங்கே ஒரு வயது முதிர்ந்த ஒருவர் வந்தார். என்னப்பா குழந்தைக்கு என்ன ஆயிற்று என்று கேட்டவாறு குழந்தையைத் தூக்கினார். உடனே குழந்தை அழத்தொடங்கியது. இறந்து விட்டது என்ற முடிவுக்கு வந்த தாயும் தகப்பனும் *சாயிநாதா சாயிநாதா* என்று பெருத்த குரல் எடுத்து குளறினர். பின்பு அந்த முதியவருக்கு நன்றியின் பொருட்டு இரண்டு ரூபாயைக் கொடுத்தனர். முதியவரும் சென்று விட்டார்.

பிறகு ஒருநாள் வெங்கரட்ராமன் சுவாமியை தரிசிக்கச் சென்ற போது சுவாமி அதே இரண்டு ரூபாயைக் காட்டி இது நீர் கொடுத்த பணம் சரியா எனக் கேட்டார்.உடல் எல்லாம் வியர்க்க வெங்கட்ராமன் பாபா வின் பாதார விந்தத்தில் வீழ்ந்து வணங்கினார்.

நம்முடைய இயல்பையே நமக்கு முழுமையாகத் தெரியாது நம்முடன் நெருங்கியவர்களைக் கூட அளவிட முடியாதுள்ளோம். அவ்வாறிருக்கும் போது பகவான் சத்ய சாயி தெய்வத்தை அளவிட முடியுமா? இருந்தும் அவரை ஓரளவு புரிந்துகொள்ளக்கூடியது அவருடைய வாழ்வில் ஒளிரும் அருளை வைத்தே

ஜெயசாயிராம் யாதவன்

# தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை இந்தியா பெற்றுக் கொடுக்குமென நம்புகிறோம்

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பு

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் அக்கறையானது முன்னிலும் பார்க்க தற்போது அதிகரித்துக் காணப்படுவதை உணர முடிகின்றது. இந்த மாறுபட்ட சூழலுடன் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வினை இந்தியா பெற்றுக் கொடுக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டினை யும் சமிக்ஞையையும் தேர்தலினூடாக உணர்த்தியுள்ளதை ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும். தீர்வு என்ற விடயத்திக்குப் பெரும்பான்மை சமூகம் குறுக்கீடாக இருக்கப்போவதில்லை. ஆனாலும் ஒரு சில சுயநல இன வாதப் போக்காளர்களின் பிடிக்குள் இருந்து ஜனாதிபதி விடுபட வேண்டும் என்றும் அக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் முடிந்துவிட்ட நிலையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தீர்வு தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? என்பது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் பேசும் மக்களாகிய நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள், அதற்கான நியாயமானதும் நிரந்தரமானதுமான தீர்வுகள் தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுக்களை நடத்தி வந்துள்ளோம்.

அந்த வகையில் இந்தியாவுடன் தொடர்ச்சியாக பேசி வந்திருக்கிறோம். இந்நாட்டில் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்துள்ள இந்திய மத்திய அரசு அது தொடர்பில் நம்பகத்தன்மையுடனேயே செயற்பட்டு வந்தது என்பதை நாம் நிச்சயமாக நம்புகின்றோம்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு அல்லது அக்கறை தற்போது மேலும் அதிகரித்துக் காணப்படுகின்றது என்றே கூறவேண்டும்.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்றுள்ள சிவ்சங்கர் மேனன் தான் பதவியேற்றதும் இது தொடர்பில் அக்கறை செலுத்தியுள்ளதைக் காண முடிகின்றது. எனவே இலங்கைத் தமிழர் விடயத்திற்கு நிச்சயமாக நியாயமான அரசியல் தீர்வொன்றை இந்தியா பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகரித்திருக்கின்றது. மத்திய அரசு பாரிய அளவில் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றது என்பதையும் உணர முடிகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் கடந்த கால பல்லவிக்ளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதும் அவசியமாகும். கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டியே தமிழ் மக்களும் அவர்களுக்கான அரசியல் தீர்வுகளும் புறக்கணிக்கப்பட்டு வந்த நிலைமை காணப்பட்டது.

புலிகள் இல்லாத இக்கால கட்டத்திலும் அதனையே கூறி ஏமாற்றுவதற்கு முற்படக் கூடாது. இன்றைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பான அரசியல் தீர்வு என்பது ஒருவித ஐயம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற தரப்புக்கள் பல்வேறு கோணங்களில் தமிழர் பிரச்சினையை நோக்குகின்றன. மொத்தத்தில் ஒற்றையாட்சி என்ற கோட்பாட்டை தலைதூக்கி நிற்கின்றதை அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலினூடாக தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தமது சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த சமிக்ஞையானது தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தாம் விரும்புகின்ற தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதாக அமைந்துள்ளது.

இதனைச் சிங்கள மக்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலியுறுத்தலாகும். நிரந்தரமான அரசியல் தீர்வு என்பதற்கு பெரும்பான்மை சமூகம் எதிராக நிற்கப்போவதில்லை என்பதையும் நாம் உணர்ந்திருக்கின்றோம். (2-4)

## 640 பேருக்கு ஏஎச் 1 என் 1 வைரஸ் தொற்று

(கொழும்பு)

நொவெல் இன்புளுவென்சா நோய்க் காரணியான ஏஎச் 1 என் 1 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களாக இதுவரை 640 பேர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இதில் 47 பேர் இதுவரை உயிரிழந் துள்ளனரென சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு கூறுகிறது.

கடந்த ஜனவரி 31ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 442 பேரின் மாதிரிகள் வைத்திய ஆராய்ச்சி நிலையத்தினால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் இந்நோய் பரவாதிருக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நோய் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பவா பலிகவர்தன தெரிவிக்கின்றார்.

இவ்வாண்டு ஜனவரி மாதத்திற்குள் மாத்திரம் 50 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (2-6)

## தளபாடங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மணற்காடு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ஒரு இலட்சம்ரூபா பெறுமதியான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை கடல் தொழில் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (2-35)

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கணித, விஞ்ஞான புதிர்ப்போட்டி முடிபுகள்

வடமாகாண பாடசாலைகளிடையே நடைபெற்ற கணித விஞ்ஞான புதிர்ப்போட்டி முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் கணிதப் புதிர்ப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் மற்றும் விஞ்ஞான புதிர்ப்போட்டியில் வெற்றியீட்டியவர்கள் ஆகியோரின் விபரங்கள் வருமாறு,

**கணித புதிர்ப்போட்டி**

**ஆங்கில மொழி மூலம்**

**தரம் -6**

ஏ.வர்ஷனா - மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி), ஜே.ஜெயதாரணி (சாவகச்சேரி இந்துக் மகளிர் கல்லூரி), எஸ். திலுக்ஷன் (ஹாட்லிக்கல்லூரி).

**தரம் -7**

பி.மேஷிகன் (யாழ்.இந்துக்கல்லூரி), பி.ஹரணி (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), எம். துஷிந்தா (நெல்லியடி மத்திய மகாவித்தி.

**தரம் -8**

எஸ். சர்வாக்ஞன் (யாழ். இந்துக்கல் லூரி), எல். விதூர்ஷா (நெல்லியடி மத்திய மகாவித்தி), கே. மகிந்தன் (ஹாட்லிக்கல்லூரி).

**தரம் -9**

ரி. கோகுலன் -ஹாட்லிக்கல்லூரி, பி.தர்ஷிகா மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), பி.குணவரன்- (யாழ். இந்துக் கல்லூரி)

**தரம் -10**

ஆர்.பிரணவன் (யாழ். இந்துக்கல்லூரி), கே. கிரிஷ்யாஜினி (வடமராட்சி இந்துக் கல்லூரி), கே.குருபரன் (யாழ். இந்துக்கல்லூரி)

**தரம் 11**

பி.கபிலன்-(ஹாட்லிக்கல்லூரி), பி.ஜனார்த்தனசர்மா(யாழ் இந்துக்கல்லூரி), பி.அருண் குமார் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தி).

**தமிழ் மொழி மூலம்**

**தரம் -6**

ஆர் .விகானி (சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி),வி.சாலினி (கரணவாய் மகாவித்தி), எம்.கவியரசன் (விக்னேஸ்வராக்கல்லூரி)

**தரம்-7**

பி.அமிர்தீசசர்மா-(வவுனியா தமிழ் மத்திய மகாவித்தி), எஸ். சிவதுர்க்கா (இறம்பைக்குளம் பெண்கள் பாடசாலை), சி.தனுஷன் (நெளுக்குளம் வித்தி

**தரம் -8**

கே. மதனகரன் (நெல்லியடி மத்தியமகாவித்தி), எஸ். தனுாஷன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), எஸ். அருள்ஷீபா லெம்பேர்ட் (சென்சேவியர் பெண்கள் கல்லூரி).

**தரம்-9**

கே.கௌசிகன் (மகாஜனாக் கல்லூரி), ரி.செந்தாழன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பி.கௌசல்யா (வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலை)

**தரம் -10**

சி.ராம்ராஜ் -(யாழ். இந்துக்கல்லூரி), என். பிருந்தா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை),ரி. திவாகரன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தி).

**தரம் -11**

எஸ்.வேணுஜா -வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம்),எஸ். கமல்க்கா (ஹாட்லிக்கல்லூரி),எம். மிதூரிகா (வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை.

**விஞ்ஞான புதிர் போட்டி**

**தமிழ் மொழி மூலம்**

ரி. ஹேசிதா -(உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். மயூரன் -வ/ தமிழ் மத்திய மகாவித்தி), ஆர்.விகினி- சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி), எஸ்.சுபவாசினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), அமிர்தீஸசர்மா - (வ/தமிழ் மத்திய மகா வித்தி), எஸ். சுபநேந்திரா- (கொடிகாமம் அ.த.க. பாடசாலை) ,கே.மதனாகரன்- (நெல்லியடி மத்திய மகாவித்தி), எம். சங்கவி - (வட்டு.மத்திய கல்லூரி).

ஜெ.ஆன் சாளினி பீரிஸ்- (சென்சேவியர் மகளிர் கல்லூரி), கே. கௌசிகன்-(மகாஜனா கல்லூரி), எஸ். தர்சிகா -(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),பி.வைஷ்ணவன் - தொல்புரம் (விக்னேஸ்வரா வித்தி, எஸ்.தினேஸ்- (ஹாட்லிக்கல்லூரி), பி.ஜீவிதன்- (யாழ் இந்துக் கல்லூரி), ஆர். ரம்யா- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை), ஆர்.பவித்ரா -வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வி.நிந்துஜா - (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), எவ். ஜெனோல்ட் பிரசன்னா- (ம/சென் சேவியர் ஆண்கள் கல்லூரி).

**ஆங்கில மொழி மூலம்**

சி. ஆன் மதூசனி (சென் சேவியர் மகளிர் கல்லூரி), எம். சாருனி நிவேதிதா (இறம் பைக்குளம் பெண்கள்மகாவித்தி), அலஸ் ஜோல் ஆசான் (வ/ தமிழ் மத்திய மகாவித்தி , எஸ் பிரபாபரன்(யாழ் இந்துக்கல்லூரி) , ஆர்.கீர்த்திகா , எஸ் . பாவனா (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), எஸ் .விருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), ஆர்.சிவேஸ்வரன்(யாழ் இந்துக்கல்லூரி), பி. டினேஸன் , ரி.கோகுலன் (ஹாட்லிக் கல்லூரி ), ஆர். தேனுசன் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி),ரி . ஜெனார்த்தன் (வ / தமிழ் மத்திய மகா வித்தி), வி.மிதுலா ஜினி (வட இந்து மகளிர் கல்லூரி ), என்.அமிலீதினி (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை) , பி.கபிலன் (ஹாட்லிக் கல் லூரி) , ரி.தர்ஷன், எஸ். பவித்திரன் (வ /தமிழ் மத்திய மகாவித்தி (2-6)


வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2008**

1) இசைமாணி/நடனமாணி முதலாம் வருடம்
2) இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடம்
3) இசைமாணி/நடனமாணி மூன்றாம் வருடம்
4) இசைமாணி/நடனமாணி நான்காம் வருடம்

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை 22-02-2010 திங்கட்கிழமை தொடக்கம் 04-03-2010 புதன்கிழமை வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு மண்டபத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இசைமாணி /நடனமாணி முதலாம் வருடம்<br>இசைமாணி /நடனமாணி மூன்றாம் வருடம் | 22.02.2010-25.02.2010 |
| இசைமாணி /நடன்மாணி இரண்டாம் வருடம்<br>இசைமாணி /நடனமாணி நான்காம் வருடம் | 01.03.2010-04.03.2010 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 15-02-2010 (திங்கட்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செய்முறைப் பரீட்சை (சங்கீதம்/நடனம்-2008)**

1) இசைமாணி/நடனமாணி 1 ஆம், 2 ஆம், 3 ஆம் மற்றும் 4ஆம் வருடத் தேர்வு-2008
2) கலை முதற் தேர்வு - (2007 & 2008)
3) பொதுக்கலை மாணித் தேர்வு பகுதி - I - (2007)
4) பொதுக்கலை மாணித் தேர்வு பகுதி - II - (2006 & 2007)


மேற்படி கற்கை நெறிகளில் சங்கீத அலகுக்கான செய்முறைப் பரீட்சைகளை 05-03-2010 (வெள்ளிக்கிழமை) தொடக்கமும், நடன அலகுக்கான செய்முறைப் பரீட்சைகளை 08-03-2010 (திங்கட்கிழமை) தொடக்கமும் இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார் மடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளி வாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: செய்முறைப் பரீட்சை முடிவடைந்ததும், பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சை அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.**

03-02-2010 (சி/4383)

# ஒரே ஒரு 'இருபது-20' போட்டி
# பங்களாதேஷ் சுருண்டது; நியூசிலாந்து அணி வெற்றி



(ஹமில்ரன்)

டானியல் விக்டோரி, மக்குலமின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி 10விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

நியூசிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரே ஒரு இருபது-20 போட்டி மற்றும் 2டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் நேற்று ஹமில்டனில் நடைபெற்ற ஒரே ஒரு இருபது-20போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 17.3ஓவர்களில் 78ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் ரகிபுல் ஹசன் 18ஓட்டங்களையும், தமீம் இக்பால் 14ஓட்டங்களையும், அகமெட் 12ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 4ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 6ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களையும், தௌப்பி, நாதன் மக்குலம், ஓரம் ஆகியோர் தலா 2விக்கெட்டையும், பிராங்கிலின் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி பிரண்டன் மக்குலமின் அதிரடியான அரைச்சதத்தின் மூலம் 8.2ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 79ஓட்டங்களைக் குவித்து 10விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் பிரண்டன் மக்குலம் 27பந்துகளில் (7பவுண்டரிகள், 2சிக்ஸ்சர்கள் அடங்கலாக) 56ஓட்டங்களையும், இவ்தாம் 20ஓட்டங்களையும் குவித்தனர்.

இப்போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த அணித் தலைவர் டானியல் விக்டோரி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# ஐ.பி.எல். தொடருக்கு ரூ.250 கோடி இன்சூரன்ஸ்

(மும்பை)

வரும் மார்ச் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள 3ஆவது ஐ.பி.எல் தொடருக்கான இன்சூரன்ஸ் தொகை ரூபாய் 250 கோடியாகும்.

மொத்தம் 60ஆட்டங்கள் கொண்ட இப்போட்டியில் தெலுங்கானா பிரச்சினை, சிவசேனா மிரட்டல் என்பன காரணமாக வெளிநாட்டு வீரர்கள் பாதுகாப்பு குறித்து அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே போட்டிக்கு 250கோடி ரூபாயை ஐ.பி.எல். அமைப்பு இன்சூரன்ஸ் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெண்டுல்கரைக் கவர்ந்த பாலிவுட் நட்சத்திரங்கள்



பாலிவூட் நட்சத்திரங்கள் அமிதாப்பச்சன், பின்னணி பாடகிகள் லதா மங்கேஷ்கர், ஆஷா போன்ஸ்லே ஆகியோர் தான் தன்னை அதிகம் கவர்ந்தவர்கள் என இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் 30ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்து சாதனை படைத்துள்ளார்.

இவரது சாதனை குறித்து கொல்கத்தாவின் கௌதம் பட்டாச்சர்யா எழுதிய புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதில் சச்சின் தெரிவித்துள்ள சில சுவாரஸ்யமான விடயங்களில்,

வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் ஒருவர் ஊக்கம் பெறலாம். சிறப்பான பேச்சு அல்லது பரபரப்பான கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் இறுதிப் போட்டி கவர்ந்து இழுக்கலாம். என்னை பொறுத்தவரை பாலிவூட் நட்சத்திரங்கள் தான் ஊக்க சக்தியாக அமைந்தனர்.

சமீபத்தில் ஆஷா போன்ஸ்லேயின் தீவிர ரசிகராக மாறினேன். 75வயதான நிலையிலும் அவர் வியக்கத்தக்க அளவில் செயல்படுகிறார். நன்கு அனுபவித்து பாடுகிறார்.

இவரது ஆற்றல் நம்பமுடியாத அளவில் உள்ளது. அதுபோல அமிதாப்பச்சன், இவரது அனைத்து படங்களும் எனக்குப் பிடிக்கும்.

**ஆச்சரியமாக உள்ளது**

அமிதாப்பசசன், ஆஷா போன்ஸ்லே, லதா மங்கேஷ்கர் ஆகிய மூவரும் என்னை கவர்வதற்கு மும்பையில் இருந்து வந்தது கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

இவர்களை பலமுறை சந்தித்துள்ளேன். ஆனால் நீண்ட ஆண்டுகளாக எப்படி இவர்களால் தொடர்ந்து சாதிக்கமுடிகிறது என்பது தான் ஆச்சரியமாக உள்ளது.

**ரகுமானுக்கு பாராட்டு**

அதுபோல் இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானையும் வியந்து பாராட்டியுள்ளேன். இவர் ஒஸ்கர் விருதுகளை வென்ற போது நாங்கள் நியூசிலாந்தில் விளையாடிக் கொண்டிருந்தோம். அங்கிருந்து அவருக்கு வாழ்த்து அனுப்பினேன்.

**துணிச்சல் வேண்டும்**

கிரிக்கெட் தவிர, எனது தந்தையின் இழப்பு, ராஜ் சிங்துங்கர்புர் மரணம் என தனிப்பட்ட சில விடயங்களை விவரிப்பது மிகவும் கடினம்.

இதுபோன்ற சில சம்பவங்களை சந்திப்பதற்கு துணிச்சல் வேண்டும். கடந்த 1999 இல் இங்கிலாந்துக்கு உலக கோப்பை போட்டிக்கு சென்ற போது எனது தந்தை மரணம் அடைந்ததால் இந்தியா திரும்பினேன்.

அப்போது எனது அம்மா உட்பட எல்லோரும் மீண்டும் விளையாட செல்லுமாறு கூறினார். ஏனெனில் எனது தந்தை இருந்திருந்தாலும் அதைத்தான் விரும்பியிருப்பார்.

**லாராவுக்கு பாராட்டு**

மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லாராவை முதன் முதலாக கடந்த 1990இல் சந்தித்தேன். பாகிஸ்தான் அணிக்கு எதிராக டெஸ்ட் ஆப் வேர்ல்ட் அணியில் இருந்த நாங்கள் இருவரும் இணைந்து 150க்கும் மேல் ஓட்டங்களை எடுத்தோம்.

அவரது அனுபவ ஆட்டத்தை மறுமுனையில் இருந்து ரசித்துப் பார்த்தது மறக்க முடியாது.

நான் எப்போதும் அவரை பின்பற்றியதில்லை ஆனால் அவரது ஆட்டங்களை டி.வியில் தவறாமல் பார்ப்பேன். எனக்குப் பிடித்த வீரர்களில் லாராவும் ஒருவர். எங்களுக்குள் எந்த பகைமையோ, விரோதமோ இல்லை.

இவ்வாறு அந்த புத்தகத்தில் சச்சின் தெரிவித்துள்ளார்.

# போர்முலா-1 கார்ப்பந்தயப் போட்டி: புள்ளி வழங்கும் முறையில் மாற்றம்

இந்த ஆண்டு முதல் போர்முலா-1 மோட்டார் கார் பந்தயப் போட்டிகளின் புள்ளி வழங்கும் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் கார்பந்தய சர்வதேச பேரவை அறிவித்துள்ளது.

புதிய புள்ளி வழங்கும் முறையின் அடிப்படையில் 25,18,15,12,10,8,6,4,2,1 என்ற கிரமத்தில் வெற்றியாளர்களுக்கு புள்ளிகள் நிர்ணயிக்கப்படும். இதுவரை காலமும் முதலாம் இடத்திற்கும் இரண்டாம் இடத்திற்கும் இடையிலான புள்ளி வித்தியாசம் இரண்டாகக் காணப்பட்ட தாகவும், தற்போது இந்த இடைவெளி ஏழாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடைவெளியின் காரணமாக வீரர்கள் போட்டிகளில் வெற்றியீட்ட அதிக முனைப்பு காட்டுவார்கள் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மோட்டார் காரில் பயன்படுத்தும் டயர்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கார்பந்தயப் பேரவையினால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய சட்ட திட்டங்களுக்கு அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர். எனினும் இந்த யோசனைத் திட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புள்ளி வழங்கும் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென கடந்த சில காலமாக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புதிய நடைமுறைகளின் மூலம் 2010முதல் போர்முலா-1 கார்பந்தயப் போட்டிகள் புதுப் பொழிவுடன் ரசிகர்களை ஈர்க்கும் என கார்பந்தாட்டப் பேரவை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# உயர்பாதுகாப்பு வலயத்தில் புதிய மண் அணை அமைப்பு

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் புதிய மண் அணை ஒன்றை படையினர் அமைத்து வருவதாக பொது மக்கள் தெரிவித்தனர். வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்த அரசு அனுமதியளித்தது.

எனினும் அப்பகுதியில் சுமார் 27கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ள போதும் 7பிரிவுகளிலுள்ள மக்களே தமது வீடுகளைப் பார்த்துவர அனுமதியளிக்கப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகள் இன்னமும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாகவே உள்ளது.

இந்நிலையில் மக்களை வீடுகளைப் பார்க்க அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களின் முடிவில் பெரிய மண்அணை ஒன்றை படையினர் அமைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை கீரிமலை தொடக்கம் காங்கேசன்துறை வரையான உயர்பாதுகாப்பு வலயப் பகுதி மக்களின் பாவனைக்கு விடப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டது. ,

இது இவ்வாறிருக்க மக்களை பார்ப்பதற்காக அனுமதிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களுக்கு மக்கள் தொடர்ச்சியாக சென்றுவர அனுமதியளிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களையடுத்தே இந்நடைமுறை அமுல்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# துடுப்பாட்ட திறமையால் இந்திய அணி சாதிக்கும்
## யுவராஜ் சிங் நம்பிக்கை

(புதுடில்லி)



இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரரான யுவராஜ்சிங், பங்களாதேஷ் டெஸ்ட் தொடரின் போது காயமடைந்தார். மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் இன்னும் குணமடையாததால் 3முதல் 4வார காலத்திற்கு ஓய்வெடுக்கும்படி யுவராஜ்சிங்கிற்கு மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதனால் அவர் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கவில்லை. ஒரு நாள் தொடரில் அவர் பங்கேற்பது சந்தேகம்தான்.

இந்நிலையில் யுவராஜ்சிங் கூறுகையில்,

ஒரு நாள் போட்டிக்கு முன்பாக உடல் தகுதி பெற்று விடுவேனா என்பது தெரியவில்லை. எனினும் 3வார காலத்திற்குள் காயம் குணமடைந்து விடும் என்ற நம்பிக்கை உள்ளது. இதுபோன்ற முக்கியமான டெஸ்ட் தொடரில் விளையாட முடியாமல் போனது ஏமாற்றமாக உள்ளது. எனினும் காயங்கள் என்பது விளையாட்டின் ஒரு பகுதியாகிவிட்டது.

தென்னாபிரிக்க அணி வலுவானது. ஆனால் இந்திய அணி ஐ.சி.சி தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது. சமீபகால தொடர்களில் சிறப்பாக செயல்பட்டுள்ளோம். காம்பீர், சேவாக் ஆகியோர் நல்ல போர்மில் உள்ளனர். சச்சினும் அதிக ஓட்டங்களை குவித்து வருகிறார்.

லக்ஸ்மனும் ஜொலித்தால் வலிமையான துடுப்பாட்டம் கிடைக்கும். இந்திய துணைக்கண்டங்களில் ஷாகீர்கான், ஹர்பஜன்சிங் எப்போதுமே போட்டி வெற்றியாளர்களாக இருப்பார்கள்.

தற்போது இஷாந்த்சர்மா போமிற்கு திரும்பியுள்ளது மேலும் வலு சேர்த்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.



# லசந்த கொலை வழக்கு நேற்று நடை பெற்றது

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான வழக்கு விசாரணை கல்கிசை நீதவான் ஹசஸ்ஜேதுங்க முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

ஐந்து தொலைபேசிக் கோபுரங்கள் ஊடாக தொடர்பு கொண்ட தொலைபேசி இலக்கங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணை முடிவில் பூரண அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதாகவும் இரகசியப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அத்திட்டிய மலகலகே ஆரம்பப் பாடசாலை அருகில் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கையடக்கத் தொலைபேசியைத் திருடியதாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து அவரை எதிர்வரும் 18ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இறுதியாக வழக்கு விசாரணை இடம்பெற்ற போது சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நேரில் கண்ட சாட்சியாளர் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நேற்று அது தொடர்பாக எவ்வித தகவலும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் 18ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-14)

## ஜனாதிபதி...

கலந்து கொண்ட எதிரணியினர் கோரினர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இடதுசாரி முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர்கள், அதன் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் பலவும் கலந்து கொண்டன. (ச-9)

## இராஜினாமா செய்யப் போவ...

தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற முன்னரும், முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தாம் பதவியிலிருந்து இரண்டு மாதங்களில் ராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தாம் துப்பாக்கி முனையில் பெறுபேறுகளில் கையொப்பமிட்டதாகவும், தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்படும் போது தாம் தேர்தல்கள் செயலகத்தில் இருக்க வில்லை என்றும், வெளியாகியதாக செய்திகளில் உண்மை இல்லை என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த 27ஆம் திகதி காலை நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் எமது மகள் கடத்தப்பட்டதாகவும் பல்வேறுபட்ட கட்டுக்கதைகள் பரப்பப்பட்டன எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகள் தொடர்பாக எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட தேர்தல் பெறுபேறுகள் அனைத்திலும் எனது கையொப்பங்கள் இடப்பட்டிருந்தன.

தேர்தல் வாக்களிப்புகள் உட்பட அனைத்து நடவடிக்கைகளும் சீரான முறையில் இடம் பெற்றன. இந்த நிலையில் தமது அலுவலக சேவையாளர்கள் மற்றும் ஏனையவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் பொதுத்தேர்தலின்போதும் பணியாற்ற எண்ணியுள்ளேன்.

கடந்த தேர்தல்களின் போது தம்மால் அநீதியான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் நீதிமன்ற நடவடிக்கைகளை அல்லது உரிய விசாரணைகளை சந்திப்பதற்கு தாம் தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5,9,14)

## தேர்தல் ஆணையாளர்-பொன்...

தேர்தல் ஆணையாளருக்கும், எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் நேற்று சந்திப் பொன்று இடம் பெற்றுள்ளது.

இரத்தினபுரி பகுதியில் தேர்தல் வாக்களிப்பு நிலையத்திற்கு அண்மையிலிருந்து மீட்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காகவே சரத் பொன்சேகா தேர்தல் ஆணையாளரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அன்னப்பறவைக்கு புள்ளடிபோடப்பட்ட நிலையில் காணப்பட்ட வாக்குச்சீட்டுகள் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக தேர்தல் ஆணையாளரிடம் சரத் பொன்சேகா எடுத்துக் கூறினார்.

இவற்றுள் 27 சீட்டுகளில் சரியான முறையில் புள்ளடி இடப்பட்டும், பின்புறத்தில் நிராகரிக்கப்பட்டவையாக முத்திரையிடப்பட்டும் ஏனையவற்றில் புள்ளடி இடப்பட்டும் அவை கீறப்பட்ட நிலையிலும் காணப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

இவை உண்மையான வாக்குச்சீட்டுகள் இல்லை எனவும் வாக்காளர்களுக்கு காண்பிப்பதற்கான மாதிரி வாக்குச்சீட்டுகள் ஆகும். இவ்வாறு ஏற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகளினால் தயாரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளின் தொகை ஒன்றையே சரத்பொன்சேகா தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பித்து கலந்துரையாடியுள்ளார் என்று கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் 21 நாட்களுக்குள் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். எதிர்க்கட்சியினரால் மீட்கப்பட்ட இவ் வாக்குச்சீட்டுகள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள தான் இணங்கியதாகவும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முறைகேடுகள் இடம் பெற்றிருப்பின் அது தொடர்பாக நீதிமன்றத்தை நாடுவார்களானால் அதற்கு முகம் கொடுக்க தயாராக இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கூறினார். (ச-9,14)

33ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 03.01.2010 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர்

சின்னத்துரை பாலசுப்பிரமணியம் J.P

தோற்றம் 05.06.1942

மறைவு 03.01.2010

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 33ஆம் நாள் 04.02.2010 இன்று முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'லலிதாபதி'
*Multi Oil Industries*
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
தொ.பே:- 021 222 6887

இங்ஙனம்
மனைவி. பிள்ளைகள்

(C-4385)

# நளினி உட்பட பதினொரு பேர் விரைவில் விடுதலையாவர்

(சென்னை)

வேலூர் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ் கொலை குற்றவாளிகள் நளினி, ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் மற்றும் இதர ஆயுள் தண்டனை கைதிகள் உட்பட 11 பேரை விடுதலை செய்வது தொடர்பாக வேலூர் கலெக்டர் ராஜேந்திரன் தலைமையில் அறிவுரை குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் கடந்த 20ஆம் திகதி மாலை ஆண்கள் ஜெயிலில் உள்ள கைதிகளிடம் விசாரணை நடத்தினர்.

பின்னர் பெண்கள் ஜெயிலில் உள்ள நளினியிடம் அரைமணி நேரம் விசாரணை நடத்தினர்.

இதனையடுத்து நளினியை அவரதுவக்கீல் துரைசாமி சந்தித்து பேசினார். அவர் கூறுகையில், அறிவுரை குழு நளினியிடம் 150 கேள்விகள் கேட்டுள்ளனர். அதற்கு நளினி 12 பக்க அறிக்கையாக பதில் தெரிவித்துள்ளார்.

நளினி விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கையில் உள்ளார் என்று தெரிவித்தார். இந்த நிலையில் அறிவுரை குழுவை எதிர்த்து சுப்பிரமணியசாமி ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இதில் தானே நேரில் ஆஜராகி வாதாட விரும்புவதாக நளினி ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில் வேலூர் கலெக்டர் ராஜேந்திரன் தலைமையிலான அறிவுரைக் குழுவின் பரிந்துரை பட்டியல் நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்டுள்ளது. (ச)

## வவுனியாவில்...

பெண் ஒருவர் மர்மமானமுறையில் இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

ஏ-9 வீதி புளியங்குளம் பகுதியினை சேர்ந்த 30 வயதுடைய பாலச்சந்திரன் தங்கதேவி என்பவரே மர்மமான முறையில் இறந்துள்ளார். (ச-5)

## மட்டு. முதல்...

பொதுவேட்பாளர் சரத் பொன் சேகாவுக்கு ஆதரவளித்தார்.

இந்த அறிவிப்புக்கு பின்னர் சிவகீதாவின் மட்டக்களப்பு வீடு தாக்குதலுக்குள்ளானது. தற்போது அவருக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## அரச திணைக்கள...

தெரிவித்துள்ளார்.

இதனிடையே சுற்றுலா பயணத்துறையின் அதிகாரசபை பணிப்பாளர் பேர்னாட் குணதிலகாவின் பதவி விலகல் உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்படவில்லை எனவும் அவரின் பதவி வெற்றிடமாகவே உள்ளதாகவும் சுற்றுலாப் பயணத்துறை அமைச்சின் செயலாளர் ஜோர்ச் மைக்கேல் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சுற்றுலாப்பயணத்துறை அதிகாரசபை பணிப்பாளர் பேர்னாட் குணதிலகா, தொலைதொடர்பு திணைக்களத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஆகியோர் பதவி விலகியது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இலங்கையில் அரசியல் உறுதி...

வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற தேவையும் இந்தியாவுக்கு இல்லை என்பதும் இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சிக்கான காரணம். ஏற்கனவே தனது ஆதரவுகளை மகிந்தவுக்கு வழங்கிய இந்தியாவுக்கு புதிய அரசுடன் உறவுகளை ஏற்படுத்துவது மிகவும் சிக்கலான விடயம்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இந்தியாவுக்கும்-இலங்கைக்கும் இடையில் நல்லுறவுகள் வலுப்பட்டிருந்தன. ஆனால் இந்திய இராணுவத்திற்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களும் இந்திய பிரதமரின் மரணமும் இந்த உறவில் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தது.

இந்த சம்பவங்களுக்கு பின்னர் இலங்கை தொடர்பான வெளிவிவகார கொள்கைகளில் இந்தியா பல தடவை சிந்தித்த பின்னரே முடிபுகளை எடுப்பதுண்டு.

விடுதலைப்புலிகளுடனான மோதலின் பின்னர் இந்தியா ஒதுங்கிய போது இலங்கை அரசுடன் சீனாவும், பாகிஸ்தானும் தமது இராணுவ ஒத்துழைப்புக்களை அதிகரித்திருந்தன. இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் ஏற்பட்டு வரும் இந்த மாற்றங்கள் புதுடில்லியை அதிகம் அச்சமடைய வைத்திருந்தது.

பொன்சேகாவுக்கு சீனா மற்றும் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்புகள் உண்டு என இந்தியா நம்புகின்றது. எனவே இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் ஆளுமையை தக்கவைப் பதற்கு மகிந்தவின் முக்கியத்துவம் இந்தியாவுக்கு தேவைப்பட்டது.

தென்னிலங்கையில் சீனா துறைமுகத்தை அமைத்து வருகையில் இந்தியா வடபகுதியில் தனது ஆளுமையை அதிகரிக்க முயன்று வருகின்றது. வடபகுதியில் இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களின் மீள்குடியேற்றங்களை வலியுறுத்தி வரும் இந்தியா யாழ்ப்பாணத்தில் தனது தூதரக அலுவலகத்தையும் அமைக்கத்திட்டமிட்டுள்ளது.

கல்கத்தாவில் தனது தூதரக அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கையும் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் இரு தரப்பும் தமது உறவுகளை வலுப்படுத்த முற்பட்டு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## படையினர்...

தொடர்பான செய்திகளும் முன் அனுமதிகள் பெறப்பட்டே வெளியிடப்பட வேண்டும். படைத்துறை பேச்சாளர்கள் அல்லது பொலிஸ் பேச்சாளர் மட்டுமே ஊடகங்களுக்கு தகவல்களை வழங்க முடியும்.

படை அதிகாரிகளையோ அல்லது படையினரையோ நேர்காணல் மேற்கொள்ள விரும்பினால் பாதுகாப்பு அமைச்சினுடாக விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டும். அதனை முதலில் பாதுகாப்பு செயலாளரே ஆய்வு செய்வார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## விடுதலைப்புலி சந்தேக நபர்...

உள்ளவர்களில் யார் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர்கள் என்பதை இலங்கை அரசு கண்டறிய வேண்டும். ஏனையவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

ஏன் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்ற காரணத்தை அரசு தெரிவிக்க மறுத்து வருகின்றது. இது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும். அவர்கள் சட்ட உதவிகளை பெறுவதற்கு அரசு அனுமதிகளை வழங்குவதுடன் அவர்களை பார்வையிட சட்டவியலாளர்களை அல்லது குடும்ப உறுப்பினர்களையும் அனுமதிக்க வேண்டும்.

போர் நிறைவுபெற்ற போது இடம் பெயர்ந்த மக்களில் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேரை அரசு பாதுகாப்பு நடைமுறைகளுக்காக முகாம்களில் தடுத்து வைத்திருந்தது. தற்போதும் முகாம்களில் ஒரு இலட்சம் மக்கள் உள்ளனர். விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுபவர்களை அரசு வேறு முகாம்களில் தடுத்து வைத்துள்ளது. அதனை புனர்வாழ்வு முகாம்கள் என அரசு தெரிவித்து வருகின்றது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் மிகவும் குறைவான தகவல்களே உள்ளன. எனவே அவர்கள் துன்புறுத்தப்படுவதற்கோ அல்லது தவறாக நடத்தப்படுவதற்கோ அல்லது காணாமல் போவதற்கோ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகவே நாம் கருதுகின்றோம் என அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் அறிக்கையை தான் பார்க்க வில்லை என தெரிவித்துள்ள இலங்கையில் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமர சிங்க இது தொடர்பில் பின்னர் கருத்துத் தெரிவிப்பதாக அனைத்துலக ஊடகம் ஒன்றுக்கு தெரி வித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

உடன் தேவை

பத்திரிகை மடிப்பவர்கள்
(ஆண்கள்-இரவுக் கடமை) தேவை.

யாழ். நகரத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்திற்குள் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்

நிர்வாகஉத்தியோகத்தர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.